
KALAIKESARI

# கலைக்கேசரி

CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

VOLUME : 04 ISSUE : 09 Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / News / 70 / 2013



மகிடிக் கலை

கல்விக்கருவூலம் 'வேம்படி'

The Red Dot...

The Potala Palace

www.kalaikesari.com / September 2013

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 100.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 125.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS...........CHF 10.00 | EUROPE..EU€ 7.00 |

ISSN 2012-6824
9772012682008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைசிறந்த மருத்துவர்கள், உயர் தாதியாளர் சேவைகள் மற்றும் நவீன தொழில்நுட்பத்துடன்

**தேசத்தின் முன்னோடி தனியார் மருத்துவமனையில் உங்கள் கண்களை பாதுகாத்திட இலகு வழிமுறை!**

NAWALOKA HOSPITALS PLC



நவலோக்கா மருத்துவமனையில் உங்கள் கண்கள், கண்களைப் போன்று பாதுகாக்கப்படுகிறது. எந்தவொரு கண் அறுவை சிகிச்சையையும் மிகவும் பாதுகாப்பாகவும் சிறப்பாகவும் செய்வதற்கு நவலோக்கா கண் சிகிச்சை நிலையம் எப்போதும் தயார். அதற்காகவே உங்களுக்கு மலிவான பெக்கேஜிகளை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். கண்புரை அகற்றல் மற்றும் சிறு அறுவை சிகிச்சைகளை பாதுகாப்பாகவும் சிறப்பாகவும் செய்யவேண்டும், இதனால் உங்களை ஒரு நாள் மருத்துவமனையில் தங்கவைக்கின்றோம்.

நவலோக்கா கண் சிகிச்சை நிலையத்தின் "லெசிக் சென்டர்" இருப்பதனால் இப்போது உங்களுக்கு கண்கண்ணாடிகள் மற்றும் கண் வில்லைகளை தவிர்த்து இந்த அழகான உலகை பார்க்க முடியும். இந்த சிகிச்சைகளுக்காக தேவையற்ற கட்டணச் சுமைகளை உங்கள் மேல் சுமத்தி உங்களை அசௌகரியத்தில் அழ்த்த நாம் விரும்பவில்லை. இவ்வாறான சிகிச்சைகளுக்காக நவலோக்கா மருத்துவமனையை தெரிவு செய்யும் உங்கள் தீர்மானம் சரியானது என்பதற்கு எமது வெளிப்படைத்தன்மையே முக்கிய காரணமாகும்.

தனியார் மருத்துவத் துறையில் முன்னோடியாக திகழும் நவலோக்கா மருத்துவமனை, நவீன தொழில்நுட்பத்தில் பரிபூரணமானதாகும். பல விருதுகள் வென்ற தலைசிறந்த மருத்துவமனையாகும். திறமையான மருத்துவ நிபுணர்களும் ஊழியர் படையணியும் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் நவலோக்கா மருத்துவமனை உங்கள் நம்பிக்கையை வென்றுள்ள மருத்துவமனையாகும். அத்தோடு ISO 9001-2008 தரச்சான்றிதழைப் பெற்றுள்ள இலங்கையின் ஒரேயொரு தனியார் மருத்துவமனையும் இதுவாகும்.

| பெக்கேஜ் Package | Rs. ரு. |
|---|---|
| கண்புரை அகற்றல் பெக்கேஜ் (Day Surgery) Cataract Eye Package (Day Surgery) | 28,000-35,000** |
| கண்புரை அகற்றல் பெக்கேஜ் (ஒரு நாள் தங்கியிருந்து) Cataract Eye Package (with 1 day stay) | 45,000-50,000** |
| ஓரக்கண் பார்வை திருத்தும் அறுவை சிகிச்சை பெக்கேஜ் (Day Surgery) Squint Correction Surgery (Day Surgery) | 42,500 |
| ஓரக்கண் பார்வை திருத்தும் அறுவை சிகிச்சை பெக்கேஜ் (ஒரு நாள் தங்கியிருந்து) Squint Correction Surgery (with 1 day stay) | 66,000 |

| பெக்கேஜ் Package | Rs. ரு. |
|---|---|
| லசிக் / LASEK அறுவை சிகிச்சை Lasik/LASEK Surgery | 60,000 |
| லேசர் சிஸ்டம் TPPV (Day Surgery) Laser System TPPV (Day Surgery) | 52,500 |
| விட்றெக்டொமி அல்ட்ராசொனிக் லேசர் RP (Day Surgery) Vitrectomy Ultrasonic Laser RP (Day Surgery) | 40,000 |
| கருவிழியமைப்பு Keratoplasty Surgery | 82,500 |

மருத்துவர் கட்டணங்கள் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது.

**லென்சுகளுக்கான செலவு இங்கு உள்ளடக்கப்படவில்லை.

GET IT ON Google play

நிபந்தனைகள் உண்டு

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 0773 863 549 / 0112 305 056

www.nawaloka.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.

www.pabcbank.com
(011) 4 667 222

5 வருட
நிலையான
வைப்புகளுக்கு

16%
(தே.வ.வீ. 12.47%)

நிலையான வைப்புகளுக்கு
அதிகூடிய வட்டியுடன்
உயர் பாதுகாப்பு

(011) 4 667 222

பான் ஏஷியா வங்கி
உங்கள் சேவைக்காக

நிபந்தனைகளுக்கு உட்பட்டது
பான் ஏஷியா வங்கி ஓர் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும் - Fitch Rating 'BBB(lka)'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHOGM 2013
Sri Lanka

முதலீடுகள், சுற்றுலாத்துறை மற்றும் வியாபார வாய்ப்புக்களின் மூலமாக இலங்கையின் புகழை சர்வதேசரீதியாக மேம்படுத்தும் இலக்குடன்

# பொதுநலவாய நாடுகள் உச்சி மாநாடு 2013 நிகழ்விற்கு இணையாக நடாத்தப்படும் வர்த்தகக் கண்காட்சி

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில்
2013 நவம்பர் 13-17 காலப்பகுதியில்
இலங்கை, பத்தரமுல்லையிலுள்ள
ஜனகலா கேந்திர நிலையம் மற்றும்
அதனைச் சூழவுள்ள பகுதியில் இடம்பெறவுள்ளது.**



இக்கண்காட்சியில் பெரும் எண்ணிக்கையான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்காட்சியாளர்கள் கலந்துகொண்டு தமது உற்பத்திகள் மற்றும் சேவைகளை சர்வதேசரீதியாக ஊக்குவிக்கவுள்ளதுடன், இரு தரப்பு வியாபார வாய்ப்புக்களைக் கட்டியெழுப்புவதையும் இது ஊக்குவிக்கவுள்ளது. இக்கண்காட்சியில் பங்குபற்றி அதன் மூலமாக உச்சப் பயனைப் பெற்றுக்கொள்ள ஆர்வங்கொண்டுள்ள சுற்றுலாத்துறையுடன் தொடர்புபட்ட தரப்பினர் மத்தியில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையானவர்களுக்கு பொன்னான வாய்ப்பளிக்க இலங்கை சுற்றுலாத்துறை முன்வந்துள்ளது.

தெரிவுசெய்யப்படுகின்ற சுற்றுலாத்துறை கண்காட்சியாளர்களின் இட ஒதுக்கீட்டிற்கான செலவை இலங்கை சுற்றுலாத்துறை பொறுப்பேற்றுக்கொள்ளும். பொதுநலவாய நாடுகள் உச்சி மாநாடு 2013 நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ள முக்கிய பிரதிநிதிகள் பலரும் இக்கண்காட்சியில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுவதால் கண்காட்சியாளர்கள் தமது உற்பத்திகளையும், சேவைகளையும் காட்சிப்படுத்தும் வேளையில் அதியுயர் சர்வதேச நடைமுறைகளைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வியாபார கண்காட்சிக்கூடங்களை முற்பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை இல.80, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரியிலுள்ள இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலகத்திலோ அல்லது www.sltda.gov.lk என்ற அதனது இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்வதன் மூலமாகவோ பெற்று, பூரணப்படுத்தி, அவற்றை 03.09.2013 என்ற திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக இலங்கை சுற்றுலாத்துஐற அபிவிருத்தி அதிகாரசபையிடம் சமர்பித்தல் வேண்டும். தயவுசெய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பொதுநலவாய நாடுகள் உச்சி மாநாடு வர்த்தகக் கண்காட்சி 2013 கண்காட்சியாளர் விண்ணப்பம்" எனக் குறிப்பிடவும். மேலதிக தகவல்களுக்கு 011-2426900 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக 310 அல்லது 340 என்ற இணைப்பு இலக்கங்களினூடாக சஞ்ஜீவா அல்லது நாமலி ஆகியோரைத் தொடர்புகொள்ளவும்.

கண்காட்சியாளர்களைத் தெரிவுசெய்யும் நடைமுறைகள் அனைத்தும் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் தீர்மானங்களுக்கு அமைவானவை.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை
www.sltda.gov.lk

srilanka
WONDER OF ASIA


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்: Contents




## அட்டைப்பட விளக்கம்:

குடாநாட்டில் உள்ள பழைய வீடுகளில் காணப்படும் அலங்கார வகைகளில் ஒன்று. தூணின் தாங்கு பகுதியில் சுண்ணாம்பு மற்றும் களிமண்ணினால் செய்யப்பட்ட அலங்காரம்.





24

தலங்காவற் பிள்ளையார் கோயில்










34

அன்ன வாகனம்



56

செந்தமிழ் மரபும் பேராசிரியர் ஆ.சதாசிவமும்






78

The Pyramid – A Monument to Mystery



**PUBLISHER**
Express Newspapers (Cey) (Pvt) Ltd.
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. +94 11 7209830
www.kalaikesari.com

**EDITOR**
Annalaksmy Rajadurai
luxmi.rajadurai@yahoo.com

**SUB EDITOR**
Bastiampillai Johnsan
johnsan50@gmail.com

**CONTRIBUTORS**
Prof. P. Pusparatham
Prof. Saba Jeyarasa
Prof. S.Sivalingaraja
Dr. K. Nageswaran
Mrs. Vasantha Vaithyanathan
Mrs. Pathma Somakanthan
Dr. Viviyan Sathyaseelan
R. Achuthapagan
L. Thev Athiran

**PHOTOS**
Sabita .N
J. H. Mirunalan
Theliwathai Joseph
R. Priyanka

**ILLUSTRATOR**
S.Kanivumathiy

**LAYOUT**
M. S. Kumar
S. A. Eswaran
K. Kulendran

**ICT**
S. T. Thayalan

**ADVERTISING**
A. Praveen
marketing@virakesari.lk

**CIRCULATION**
K. Dilip Kumar

**SUBSCRIPTIONS**
J. K. Nair
subscription@kalaikesari.lk

**PRODUCTION**
L. A. D. Joseph

**ISSN 2012 – 6824**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர் பக்கம்
Editor's Note

வணக்கம் கலைக்கேசரி வாசகர்களே!

To our esteemed readers,

**September, 2013**

மக்களுக்கு களிப்பூட்டும் கலை ஆற்றுகைகள், அவர்தம் வாழ்வில் என்றென்றும் இன்றியமையாதவையாக விளங்குவது இயற்கை. உழைப்பும், களைப்பும், சலிப்புமாக வாழ்நாளைக் கழிக்கும் சாதாரண மக்களுக்கு, சிறந்த பொழுதுபோக்காக அமையும் கலை நிகழ்ச்சிகள், ஊக்கமும் உற்சாகமும் அளிக்கின்றன. அதன் காரணமாகத்தான் பண்டைய காலத்தில் இருந்தே, தமிழ் மக்கள், ஆலயங்களில் வழிபாட்டு முறைகளுக்கு மேலாக, கலை ஆற்றுகைகளை மேற்கொண்டு வந்தனர். இந்துக் கோவில்களில் நாதஸ்வரக் கச்சேரிகள் முக்கிய இடத்தைப் பெறுவது நாமறிந்ததே.

கலை நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை, குறிப்பாக மக்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய நாடகங்கள், வில்லிசை, கதாப்பிரசங்கம், இசை நிகழ்ச்சிகள் போன்றவை களிப்பூட்டுபவையாக மட்டுமன்றி, மக்களுக்கு நல்வழி காட்டும் சேதிகளையும் கொண்டிருத்தல் சிறப்பு.

மனித விழுமியங்களை அலட்சியம் செய்யும் ஒரு மனோபாவம் மிகுந்து, கலாசாரச் சீரழிவுகளும் குற்றச் செயல்களும் அதிகரித்து வரும் இன்றைய காலகட்டத்தில் கலைஞர்கள் இந்நிலை குறித்து ஊன்றிச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இந்நிகழ்ச்சிகள் மூலம், இயல்பான முறையில் மக்களுக்கு மனித விழுமியங்களை வற்புறுத்திக் கூறுதல் நன்றாகும்.

மேலும் வழமைபோல் இவ்விதழிலும் வாசகர்களைச் சிந்திக்க வைக்கும் அறிஞர்களது பல்வேறு விடயதானங்களும் இடம்பெறுகின்றன. வாசித்து இன்புறுவதுடன், உங்களது கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளலாமே.

நன்றி வணக்கம்.

அன்புடன்
அன்னலட்சுமி இராஜதுரை

Culture is the collective manifestation of human intellectual achievement. It is demonstrated through rituals and traditions, language, religion, food, music, architecture, and the arts.


Culture can be specific, such as language, music, food, and connects us with other members of society. For example, the nathaswarm, a classical musical instrument in South India, is an auspicious instrument played during weddings and other religious ceremonies. It is often recognized by South Indians in its many social or religious contexts. Material culture, such as sculpture and architecture, connects us universally through shared heritage. The Pyramids, whether of Egypt or Central America, tell us of the lifestyle that existed in the days of our ancestors.

Culture is a higher level of aesthetics. It is through observing, understanding, and experiencing cultures that we learn about our ancestors, ourselves, and our future.

We hope you will enjoy this issue, which focuses on the cultural achievements of mankind.


Annalakshmy Rajadurai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ்.நகரின் கல்விக்கருவூலம்
# வேம்படி மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அதாவது 1814 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த வெஸ்ஸியன் சபையினரால் மாத்தறை, காலி, மன்னார், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவினர். வெஸ்லியன் சபையைச் சேர்ந்த வண. தோமஸ் ஸ்குவான்ஸ், வண.ஜேம்ஸ் லிஞ்ச் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்து அப்போது யாழ் நிர்வாகியாக இருந்த ஜேம்ஸ் மூ யாட் என்பவரைச் சந்தித்து பாடசாலைகள் ஆரம்பிக்கும் திட்டத்தை முன்வைத்தனர்.

அந்நாளய யாழ்ப்பாண நகரம், இன்றைய யாழ்.மத்திய கல்லூரியில் இருந்து ஆரம்பமாகி கோவில்வீதி, மூன்றாம் குறுக்குத்தெரு, கடற்கரை வீதி ஆகியவற்றுக்கு உட்பட்டிருந்தது. மேற்குத் திசையிலே நட்சத்திர வடிவிலான ஒல்லாந்தர் கோட்டையும் வடக்கில் இன்றைய ட்றிமர் மண்டபமாக இருக்கும் அன்றைய ஒல்லாந்தர் தளபதியின் இருப் பிடமும் வேம்படி மகளிர் கல்லூரியின் தென்பக்க எல்லையாக இருக்கும் அகழியை அடுத்து இன்று வகுப்பறைகளாக இருக்கும் நீண்டதொரு பெரிய கட்டிடத் தொகுதியும் பழைமையான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களாக திகழ்ந்தன.


இங்கு பாரிய வேம்பம் மரங்கள் நன்கு வளர்ந்து, குளிர்ச்சியைத் தந்து, சுற்றாடலைத் தூய்மைபடுத்திய வண்ணமிருந்தன. 1917 ஆம் ஆண்டில் வேம்படியின் இக்கட்டிடத் தொகுதி ஏலத்தில் விடப்பட்ட போது, ஜேம்ஸ் முயாட் இதனை கொள்முதல் செய்து 1824 ஆம் ஆண்டு வெஸ்ஸியன் சபைக்கு அன்பளிப்பு செய்தார். இதனால் பழைய அநாதை இல்லத்தில் நடைபெற்று வந்த யாழ். வெஸ்ஸியன் ஆங்கிலப் பாடசாலை வேம்படி வளாகத்திற்கு மாற்றப்பட்டது. யாழ் ஆங்கிலப் பாடசாலை, வேம்படி வெஸ்ஸியன் பாடசாலை என்று மக்கள் அழைக்கத் தொடங்கினார்கள்.




1823ஆம் ஆண்டில் 42 மாணவர்களே ஆங்கிலப் பாடசாலையில் கல்விக் கற்றதாக மெதடிஸ்த திருச்சபை வரலாறு ஒன்று கூறுகிறது. இப் பாடசாலை வேம்படி வளாகத்துக்கு மாற்றப்பட்ட முதலாம் ஆண்டி லேயே 40 பெண் பிள்ளைகள் கல்வி கற்றதாக பாடசாலையின் பழைய பதிவுகள் கூறுகின்றன. இவர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத்தில் பல்வேறு பதவி நிலைகளில் இருந்தவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பிள்ளைகளாவர். இவர்களுக்கு திருமதி.ஸ்ராடர் என்ற ஆங்கிலேயப் பெண்மணி ஆசிரியராக இருந்தார். இவர் போர்த்துக்கேய, டச்சு, தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகளைக் கற்பிக்கக் கூடியவராக இருந்தார். இதனை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது 1825 ஆம் ஆண்டிலேயே யாழ். குடாநாட்டில் அதுவும் வேம்படி வளாகத்தில் பெண் கல்வி ஆரம்பிக்கப்பட்டு விட்டது எனலாம்.

தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் கிறிஸ்தவ சமயத் தொண்டில் ஈடுபட்டிருந்த அனேக ஐரோப்பிய மதகுருமார் தமிழ் அறிஞர்களாக இருந்தார்கள். இவர்களில் முதன்மையாக கருத கூடியவர்கள் வீரமாமுனிவர், வணக்கத்துக்குரிய ஜி.யூ.போப் அடிகளார், வணக்கத்துக்குரிய டாக்டர் பீற்றர் பேர்சிவல் ஆகியோராவர். 1832 ஆம் ஆண்டு யாழ் குடாநாட்டுக்கு வந்த டாக்டர் பீற்றர் பேர்சிவல் அடிகளார் 1833-34 ஆம் ஆண்டில் வெஸ்லியன் சபையின் தலைவரானார். வேம்படி வளாக ஆங்கிலப் பாடசாலையில் கூடுதலான மாணவர்களை உள் வாங்குவதற்காக விடுதி ஒன்றை ஏற்படுத்தினார்; தலைமை ஆசிரியர் ஒருவரை நியமித்தார்; திறமையான ஆசிரியர்களைச் சேர்த்துக் கொண்டார்; புதியதொரு பாடத்திட்டத்தை அறிமுகப் படுத்தினார்; கல்விக்குரிய வழமையான பாடங்களுடன் வரலாறு, மெய்யியல், அட்சர கேந்திர கணிதம், ஒழுக்கவியல் என்பனவும் அங்கு பாடங்களாக்கப்பட்டன. லத்தீன், இலக்கணம், சட்டம், அரசியல் ஆகிய பாடங்கள் வேம்படி பாடசாலையில் கற்பிக்கப்பட்டதற்கு வரலாறு சான்றாகிறது. இக்காலகட்டத்திலேயே மாணவர்களுக்கு அச்சடிக்கப்பட்ட பாடப் புத்தகங்களும் வழங்கப்பட்டன.

பேர்சிவல் அடிகளார் 'மாணவர்களை வழங்கும் பாடசாலைகள்' என்ற பெயரில் ஆங்காங்கே சிறிய பாடசாலைகளை ஆரம்பித்தார். இச் சிறிய பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியை ஆரம்பிக்கும் மாணவர்கள் தமது கல்வியை முடித்துக் கொண்டு நகரின் மத்தியிலுள்ள வேம்படி ஆங்கிலப் பாடசாலையில் தமது கல்வியை தொடரும் வாய்ப்பை பெற்றனர். யாழ்ப்பாண நகரின் மத்தியிலுள்ள ஆங்கிலப் பாடசாலைக்கு இம்மாணவர்கள் அனுப்பப்பட்டதால் இப்பாடசாலையை யாழ். மத்திய பாடசாலை என அழைக்கப்பட்டது. 1834 ஆம் ஆண்டு வரை இப்பாடசாலை ஆண்களும் பெண்களும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்வி கற்கும் கலவன் பாடசாலையாக திகழ்ந்தது. 1839 ஆம் ஆண்டு பங்குனி மாதம் நான்காம் திகதி அப்போதைய தேசாதிபதியாக இருந்த ஸ்டூவாட் மக்கேன்சி, பேர்சிவல் அடிகளாரால் வழிநடத்தப் பட்ட பாடசாலைக்கு வருகை தந்திருந்தார். இது குறித்து பேர்சிவல் அடிகளார் இங்கிலாந்துக்கு அனுப்பிய கடிதத்தில் பின்வருமாறு குறிப் பிட்டுள்ளார். ''மான்புமிகு தேசாதிபதி எங்கள் பாடசாலை பகுதிகளைப் பார்வையிட்டு மாணவர்களின் நல்லொழுக்க, நடத்தைகளை மதிப்பிட்டு அவர்களின் பொதுக் கல்வி முன்னேற்றத்திற்கு நாம் வகுத்திருக்கும் திட்டங்களை ஆராய்ந்தார். இதன்போது சுமார் 250 மாணவர்கள் அங்கு சமூகமளித்து இருந்தனர். தேசாதிபதி அவர்கள் வகுப்பறை ஒன்றில் அவர்களின் பாடங்களில் சிலவற்றை பரீட்சிக்க






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புவதாக தெரிவித்தார். அப்போது நான் ஆரம்ப இலக்கணம், புவியியல், வரலாறு ஆகிய பாடங்களில் பல கேள்விகளைக் கேட்டேன். அவர்கள் சரியான விடையைக் கூறியது தேசாதிப தியை மிகவும் மகிழ்ச்சிப்படுத்தியது.'' என அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஆண்கள் பாடசாலையை மறுமலர்ச்சி செய்த பேர்சிவல் அடிகளார் 1834ஆம் ஆண்டில் பெண்களுக்கும் தனியானதொரு பாடசாலையை சிறிய அளவில் ஆரம்பித்தார். வேம்படி வெஸ்லியன் சபை இல்லத்திலேயே ஐந்து பிள்ளை கள் கல்வி கற்றனர். இவர்களில் மூவர் அந்நாளில் மாவட்ட நீதிபதியாக இருந்த ஜேம்ஸ் பிரைசின் பெண்பிள்ளைகள்; மற்றைய இருவரின் ஒருவர் ஆங்கிலேயர்; மற்றவர் தமிழ்ப் பெண். 1837ஆம் ஆண்டில் பெண்களின் கல்விக்காக தாம் ஏற்படுத்திய ஒழுங்குகளை பேர்சிவர் அடிகளார் விபரமாக எழுதியுள்ளார். 'மேல் ஆங்கில பெண் பாடசால' என்பதாக ஒன்றும் - இதில் 24 பெண்கள் கல்விக் கற்றதாகவும் இலத்தீன், சட்டம், கேந்திரக்கணிதம், அரசியல் தவிர்ந்த ஆண்களின் பாடசாலைப் பாடத்திட்டம் இங்கு கற்பிக்கப்பட்ட தாகவும் 'கீழ் ஆங்கிலப் பெண் பாடசாலை' என மற்றொன்றும்-இதில் 38 தமிழ் - ஆங்கில சிறுமிகள் ஆங்கிலம், தமிழ், தையல் ஆகிய பாடங்களைக் கற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆடைகள் தைப்பதற்கு தையல் இயந்திரம் இல்லாத அந்த காலத்தில் தையற் பாடம் முக்கியமாக இருந்தது.

வணக்கத்துக்குரிய பேர்சிவல் அடிகளாரால் 1838ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மகளிர் விடுதி தமிழ்ப் பாடசாலை பின்னர் வேம்படி மகளிர் கல்லூரியாக வளர்ச்சி பெற்றது. இந்த வளர்ச்சியில் பேர்சிவல் அடிகளார் எதிர் நோக்கிய தடைகள் பலப்பல. பெண்கள் எழுதத்தறிவு பெறுவதை அவர்களின் தாய்மாரே தடுத்தனர்; எதிர்த்தனர். ''இது எங்களுடைய வழக்கம் இல்லை. பெண்கள் படிப்பது ஒழுக்கம் இல்லை. படிப்பதால் மகளுக்கு என்ன லாபம்? இது அவளின் தரத்தைக் குறைக்கும்'' என மாணவிகளை பாடசாலைகளில் சேர்க்க முற்பட்டபோது எதிர்ப்புகள் உருவாகின. எதிர்ப்புகள் எத்தகைய தாக இருந்தபோதிலும் வேம்படியில் மகளிர் கல்வி வேரூன்றி விட்டது. இங்கு கல்விகற்ற மாணவர்கள் பாடசாலைக்கு வந்து செல்வதற்கு வாகன வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. நீதிபதி பிரைசின் மூன்று பெண் பிள்ளைகளும் இவ்வாகனத்திலேயே செ ன்றுவந்தார்கள். சாதாரண மக்களுடன் பழக வேண் டும் என்று நீதிபதி விரும்பியதனால் இவ்வாறு அவர்கள் உள்ளூர் மாணவர்களுடன் பயணித்தார்கள். நண்பகல் உணவுக்காக வீடு









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் மாணவர்கள் பிற்பகல் பாடசாலைக்கு வராமல் நின்று விடக் கூடாது என்பதற்காக மதிய உணவும் அப்போது வழங்கப்பட்டது.

பேர்சிவல் அடிகளார் இங்கிலாந்து சங்கத்தைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க செல்வி ருவீடி வேம்படி பெண்கள் பாடசாலைக்கு அதிபராக அனுப்பப்பட்டார். இரண்டு வருடங்களின் பின்னர் திருமதி பேர்சிவல் என்பவர் உள்ளூர் உதவியாளர்களின் சேவையுடன் அதிபராக கடடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

1839ஆம் ஆண்டு காலப்பகுதியில் பேர்சிவல் அடிகளாரின் நன்மாணவராக ஆறுமுகநாவலர் அவர்கள் திகழ்தார்கள். ஆறுமுகநாவலர் தமது 12ஆவது வயது முதல் 18ஆவது வயது வரை ஏழாண்டுகள் வேம்படி வளாகத்தில் ஆங்கிலக் கல்வி கற்றும் 1848 வரை உயர் வகுப்பு மாணவர்களுக்கும் பேர்சிவல் அடிகளாருக்கும் தமிழ் கற்பித்தும் 14 வருடங்கள் வேம்படி வளாகத்தில் ஆசிரியப் பணியாற்றினார். ஆறுமுகநாவலர் பேர்சிவல் அடிகளாரை மாத்திமே 'துரை' என்று மதிப்பு மரியாதையுடன் அழைத்தார்.

19ஆம் நூற்றாண்டினதும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் யாழ்ப்பாணத்தில் வேம்படி வளாகம் கேந்திர நிலையமாக விளங்கியது. சிவ நடனத் தத்துவத்தை உலகிற்கும் வெளிப்படுத்திய கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி 1906ஆம் ஆண்டில் வருகை தந்து உரையாற்றிய வளாகமும் வேம்படியே.

உலகியலில் ஈடுபட்டிருப்பவர்களை அருள் உலகிற்கு ஈர்ப்பதுவே இறைசெயல். ஆனால் வேம்படியின் ஆழுமையோ அருளுலகில் இருந்தவர்களை அறிவுலகிற்கு ஈர்த்தது. முன்னர் பேர்சிவல் அடிகளார்; அடுத்து வண்ணார்பண்ணைத் திருச்சபைக்காக வந்த செல்வி அயசனை வேம்படி தன்னகத்தே ஈர்த்துக்கொண்டது. இருவரும் நீண்ட காலம் வேம்படியை வழிநடத்தினார்கள். யாழ்ப்பாண சரித்திரத்திலேயே முதன்முதலாக வேம்படி கல்லூரியிலிருந்தே பெண்பிள்ளைகள் கேம்பிரிஜ், கல்கத்தா பல்கலைக்கழகங்கன் கனிஷ்ட பரீட்சைகளுக்குத் தோற்றினார்கள். இவர்களில் நல்லம்மா முருகேசு என்பவர் இலங்கையில் முதல் தமிழ் பெண் வைத்தியர் என்ற பெருமையைப் பெற்றார்.

1910 ஆம் ஆண்டு வேம்படி வளாகத்திலிருந்த ஆண்கள் பாடசாலை அகற்றப்பட்டு யாழ். மத்திய கல்லூரி வளவிற்கு மாற்றப்பட்டது.1920 ஆம் ஆண்டிலிருந்து வேம்படியில் இரண்டு பெண் பாடசாலைகள் இருந்தன. மகளிர் பாடசாலை (ஆங்கிலம்), மகளிர் விடுதிப்பாடசாலை (தமிழ்) ஆகியனவாகும். வேம்படியில் ஒரே வளவில் இருபாடசாலைகள் இயங்கியதால் ஒரு பாடசாலையை மூடும்படி திணைக்களம் அறிவுறுத்தியது. எனவே விடுதிப் பாடசாலையை பருத்தித்துறையில் இருந்த மெதடிஸ்த மகளிர் கல்லூரியுடன் இணைக்கப்பட்டது. 1920 ஆம் ஆண்டில் முதல்முதலாக இல்ல விளையாட்டுப் போட்டி பழைய பூங்காவில் நடைபெற்றது. 1924 ஆம் ஆண்டில் 'சரியதைச் செய்யத் துணிந்திடு' என்ற வாசகம் பொறிக்கப்பட்டது.

-**திருமதி யோ. மாலதி** (பழைய மாணவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஷேகவதி


## ஒரு திறந்தவெளிப் புதையல்

ஷேகவதி (Shekhavathi) ஓர் அழகானதும் வித்தியாசமானதுமான பெயர். பெயரைப் போலவே கலைச் செல்வங்கள் பொலிந்து விளங்கும் பிராந்தியம் ஷேகவதியாகும். தென் கிழக்கு ராஜஸ்தானில் உள்ள ஷேகவதியைப் போல் ஒரு திறந்தவெளிப் புதையலாகும். (Open air treasure) இது போல் இந்தியாவில் வெறெந்தப்பகுதியிலும் காண முடியாது. ஏன், உலகில் வேறெங்குமே காண முடியாததெனலாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







வர்த்தகர்களின் வாசனைத் திரவிய வியாபாரத்துக்கான வழியில் (Spice route) அமைந்துள்ள இப்பிரதேசத்தின், சிறு சிறு நகரங்களில் வரிசை வரிசையாக அமைந்திருக்கும் வர்ண சித்திரங்கள் தீட்டப்பட்ட ஏராளமான வீடுகள் கண்கொள்ளாக் காட்சிகளாகும். இங்கு வாழ்ந்திருந்த வர்த்தகர்களின் (மார்வாரிகள்) அபரிமிதமான செல்வச் செழிப்பினை பிரதிபலிக்கும் வகையில் இங்கு 19ஆம் 20ஆம் நூற்றாண்டின் கட்டிடக்கலை எழில் கூட்டுகிறது. ஷேகவதி பிராந்தியத்துக்கென ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது. இந்தியாவின் மிகப்பெரும் பெரும் கோடீஸ்வரர்களை உருவாக்கிய பிராந்தியம் இது தான்.

15ஆம் நூற்றாண்டில் ராவ் ஷேகாஜி (1433-88) என்பவர் இப்பிராந்தியத்தின் மன்னனாக ஆட்சி புரிந்தார். அவரது பெயராலேயே இப்பகுதி ஷேகவதி என அழைக்கப்படுகிறது. அந்த ஆட்சியாளர்களின் வழித் தோன்றல்கள் தற்போதும் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்பகுதி தற்போது ஜுன் ஜுனு (Jhujhunu) மற்றும் சிக்கார்(Skar) என அழைக்கப்படுகின்றன. குஜராத்துக்கும் மற்றும் வட இந்தியாவுக்கும் இடையில் உள்ள துறைமுகங்களுக்கு இடையில், ஒரு கேந்திர முக்கியத்துவமான இடத்தில் ஷேகவதிப் பிராந்தியம் அமைந்திருந்த காரணத்தினால் அவற்றினூடாக வர்த்தகர்கள் பயணம் மேற்கொண்டு செல்ல வேண்டியவர்களாக இருந்தார்கள். அவர்களிடம் தீர்வையை விதித்து, பணம் சம்பாதித்ததன் காரணமாக ஷேக்வதி நெரும் செல்வச் செழிப்பு மிகுந்த பிராந்தியமாக விளங்கியது. பம்பாய், கல்கத்தா ஆகிய துறைமுகங்கள் அபிவிருத்தி கண்டதுடன், ஷேகவதி பிராந்தியத்தின் வருமானம் குன்ற ஆரம்பித்தது.

19ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் கிழக்கிந்தியக் கம்பனியின் தூண்டுதலின் பேரில், ஷேகவதி வர்த்தகர்கள், தமது வீடுகள், குடும்பங்கள் மற்றும் சொத்துக்களை விட்டு, கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய நகரங்களுக்கு பிரிட்டிஷ் பாதுகாப்பு உத்தரவாதத்தின் பேரில் சென்றார்கள். அவர்கள் சம்பாதித்து அனுப்பிய மிகப்பெரும் செல்வம் காரணமாக அழகிய வீடுகள், கோவில்கள், கல்லறை மேல் அமைக்கும் நினைவு சின்னங்கள், மாளிகைகள், கிணறுகள், நினைவுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







தூபிகள் ஆகியவற்றினை அமைத்தார்கள். அழகுக்கு அழகு சேர்க்கும் வகையில் சுவர்கள், பல்கனிகள், கூரைகள், வளைவுகள், தூண்கள், கல்லறை மாளிகைகள், வளை மாடங்கள் மற்றும் கிணறுகளின் விளிம்புகளிலும் வண்ண ஓவியங்களைத் தீட்டி எழில் சேர்த்தார்கள். அத்துடன் முற்றத்துடன் கூடிய கவர்ச்சிமிகு வீடுகள் ஏராளமாகக் கட்டடப்பட்டன. சுவர்கள் மற்றும் கூரைகளில் எல்லாம் அழகிய சித்திரங்களைத் தீட்டினார்கள். நீல வர்ணமும் கரும் சிவப்பு வர்ணமுமே முக்கியத்துவம் பெற்று விளங்கின. இருப்பினும் தங்க வர்ணமும் பூசப்பட்டன.

ஷேகவதியின் கவர்ச்சிமிகு காட்சிகளாக இவை இன்றும் மிளிர்கின்றன. அத்தோடு பிரமாண்டமான மாளிகைகள் பல, இந்திய வர்த்தகத்துறையில் மிகப்பெரும் செல்வாக்கினைக் கொண்ட டால்மியா, கொன்னாக்கள், கெடியாக்கள், ஜுன் ஜுன்வாலாக்கள், சிங்கானியர்கள் மற்றும் ஷேகவதியின் வரலாற்றினை உருவாக்கியவர்களுக்குச் சொந்தமாக விளங்குகின்றன. சுவர் சித்திரங்களைக் கொண்டு விளங்கும் கட்டிடங்கள் நான்கு பிரதான வகையைச் சார்ந்தவையாக விளங்குகின்றன.

மார்வாரி வர்த்தகர்களின் இல்லங்களான மாளிகைகளின் வரவேற்பு பகுதி மிக ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். உட்பகுதி பெண்களுக்கு உரியதாகும். மேல் மாடிகளிலுள்ள படுக்கை அறைகளும் மிகவும் அலங்காரம் செய்யப்பட்டிருக்கும். ஹேவ்லிஸ் (Havelis) என அழைக்கப்படும் இந்த பங்களாக்களின் மாடிகள் காலத்துக்கு காலம் மேலே, மேலே கட்டப்படுவதால் அந்த அந்தக் காலத்துக்குரிய வித்தியாசமான சுவர் சித்திரங்களுடன் காட்சி தரும். இல்லத்தின் முன்புறத்தில் தீட்டப்பட்ட சித்திரங்கள், வெய்யிலிலும் மழையிலும் பழுதடையாமல் இருக்க நீண்ட முன் மறைப்புகளும் அமைக்கப்பட்டிருக்கும்.

அடுத்து ஆலயங்கள். இவை சம தரையின் நடுவே, முற்றம் இருக்கும்படியாக அமைக்கப்பட்டு அலங்காரமான தூண்கள், வளைவுகள், கோபுரங்கள் ஆகியவற்றுடன் காட்சி தரும். மேற் கூரை தட்டையாக சித்திர வேலைப்பாடுகளுடன் காட்சிதரும். அதுபோன்று நினைவுத் தூபிகளும் பல தூண்களுடன் விஸ்தாரமாக, வளைவுகள், தூபிகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கட்டப்பட்டு சுவர் சித்திரங்களுடன் விளங்கும்.

அடுத்து முக்கியமாக விளங்குவது 'தர்மசாலா' வாகும். அக் காலத்தில் வர்த்தக நோக்கில் செல்லும் வர்த்தகர்கள் இக்கட்டிடங்களில் தான் தங்கிச் செல்வார்கள். இந்த உஷ்ண பிரதேசத்தில் கிணறுகள் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளன. அதனால் கிணறு கட்டுவது என்பது ஒரு கொண்டாட்டத்துக்கு உரிய விடயமாகக் கருதப்பட்டது. எனவே அதன் சுவர்களில் பெருந் தொகைப் பணம் செலவழித்து சித்திரங்களை வண்ணம் வண்ணமாகத் தீட்டுவார்கள். அதனால் அதனைப் பார்வையிட மக்கள் பெருமளவில் செல்வார்கள்.

இக்கட்டிடங்களில் அமையும் சுவர்ச் சித்திரங்கள் பாணி (Style) பொருள் (Subject) வர்ணப்பொருட்கள் என மூன்று வகையில் அமையும். இப்பொருட்கள் 1800களில் ஜெர்மனியில் உள்ள இரசாயன தொழிற்சாலைகளில் இருந்து பெறப்பட்டன. அறைகளின் உட்புறங்கள், ஆலய கூரைகள், வளைமாடம் போன்றவற்றிற்கான நுட்ப சுவர்ச்சித்திரங்கள், வெளிப்பிரதேசங்களில் இருந்து வந்த ஓவியர்களின் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டன. கட்டிடங்களின் வெளிப் பகுதிகளில் உள்ள சுவர்ச்சித்திரங்களில் பெரும்பாலானவை உள்ளூர் ஓவியர்களினாலேயே மேற்கொள்ளப்பட்டது. சுவர்ச் சித்திரங்கள் மிகு அலங்காரமாக மேற்கொள்ளப்பட்ட காலத்தில் இருந்து *(1830 - 1900)* அவை வீழ்ச்சிக் காணத் தொடங்கிய காலம்வரை *(1900 - 1930)* மிக முக்கியமாக இடம் பிடித்திருந்த கருப்பொருள்கள், புராணக்கதைகள், உள்ளூர் மரபுக்கதைகள், கிராமியக் கதைகள், மிருகவேட்டை, மல்யுத்தம், போர்க்களங்கள் மற்றும் நாளாந்த வாழ்க்கை கலை கலாசார நிகழ்வுகள் ஆகியனவாகும்.

ஆனால், தெய்வங்கள், கதாநாயகர்கள், காப்பியங்கள், புராணங்கள் ஆகியவற்றைச் சித்திரிக்கும் மரபுகள் படிப்படியாக மறைந்து காலப்போக்கில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் இடம்பிடிக்கலாயின. இதற்குக் காரணம் ஷேகவதி வர்த்தகர்கள் மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்களாக இருக்க வேண்டும். ஆங்கிலப் பெண்கள், மோட்டார் கார்கள், கிராம போன்கள், ஏன் ரைட் சகோதரர்களைக் கூட வரையத் தொடங்கி விட்டார்கள்!

- கங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பின் வரலாற்றுப் படிமங்களைச் சுமக்கும் மகிடிக் கலை


-எல்.தேவஅதிரன், பி.ஏ







மலையாள மந்திரவாதிகளில் ஒருவர்



மட்டக்களப்பு பூசாரி



மகிடிக்கு வைக்கப்படும் கும்பத்தில் சேவல், மதுபானம் உள்ளடக்கம்

கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மரபு ரீதியான தொன்மை வாய்ந்த கலை அம்சங்களான நாட்டுக் கூத்து, கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, கொம்பு விளையாட்டு, மகிடிக்கூத்து, அம்மானை, பறை மேளக் கூத்து, புலிக் கூத்து போன்ற கலைகள் காணப்படுகின்றன.

மகிடி எனப்படுகின்ற கூத்து வகை மட்டக்களப்பு மாவட்டத்தில் கரையோரப் பகுதிகளான சந்திவெளி, வந்தாறுமூலை, ஆரையம்பதி, தேத்தாத்தீவு, நாவலடி மற்றும் அம்பிளாந்துறை போன்ற பிரதேசங்களிலும் காலங்காலமாக நிகழ்த்தப்பட்டு வந்திருப்பதனை அவதானிக்க முடிகிறது. மகிடிக் கூத்து ஆடப்படும் ஒவ்வொரு ஊரிலும், அவ்வூரின் வரலாற்றுணர்வையும் அவ்வூர் மக்களின் சிந்தனைப் போக்கினையும் வெளிப்படுத்தும் வகையிலேயே மகிடிக்கூத்து வடிவமைக்கப் பட்டுள்ளது.

ஊரில் நீண்ட காலமாக வாழ்கின்றவர்களுக்கும் வெளியிலிருந்து நுழைபவர்களுக்கும் இடையிலான முரண்பாடுகளை மந்திர தந்திர மதிநுட்பங்கள் ஊடாகத் தீர்த்துக் கொள்ளும் கதையே மகிடிக் கூத்தாக அமைகிறது. இதில், சில ஊர்களில் இருப்பவர்கள் வெளியிலிருந்து வந்தவர்களுடன் எவ்வித விட்டுக் கொடுப்புகளும் இன்றி அவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி கொள்வதும், சில கிராமங்களில் இருப்பவர்கள் வெளியிலிருந்து வருபவர்களுடன் விட்டுக் கொடுத்து சமரசம் செய்து அவர்களை ஏற்றுக் கொள்வதுமாக மகிடிக் கதைகள் அமைந்து விடுகின்றன. இவ்வாறு விட்டுக்கொடுக்காமலும், விட்டுக் கொடுத்தும் செல்லுகின்ற இரு வேறுபட்ட மனோ நிலைகளுக்கு அவ்வூர்களின் சமூக, பொருளாதார, அரசியல், வரலாற்றுப் பண்பாட்டம் சங்கள் காரணங்களாக இருந்து வந்துள்ளன. பொருளாதார ரீதியில் தன்னிறைவுடனும் நீண்ட வர்க்கத்தினர் மீதான சாதாரண மக்களின் மனோ நிலை அதிகாரத் தரப்பினரை கேலிக்கும் கிண்டலுக்கும் உரிய கோமாளிகளாக சித்திரிக்கும் தன்மையினூடாக வெளிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறு ஒரு சமூகத்தின் சமூக, பொருளாதார, அரசியல், வரலாற்று பண்பாட்டம்சங்களையும், அவை தொடர்பான கருத்து நிலைகளையும் வெளிக்காட்டும் முக்கியமான நிகழ்த்து கலையாக மகிடிக் கூத்தரங்கு கிராமங்களில் வாழ்ந்த புலமையாளர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது.



ஆதிவாசிகளான குறவர்கள் ஆற்றுகைக் களத்தில்

வரலாற்றுப் பாரம்பரியங்களுடனும், தொடர்ச்சியாக நிலைத்து வாழும் வரலாற்றினைக் கொண்டவர்களாகவும் வாழும் சமூகங்களிடையே ஆடப்படும் மகிடிக் கூத்துக்களில் ஊரில் உள்ளவர்கள் வெற்றிபெறுவதும் கதை முடிவாக அமைகின்றது.

நாடோடிகளாக வந்து பின்னர் நிலையாக வாழத் தொடங்கிய வரலாற்றினைக் கொண்ட சமூகங்களில் ஆடப்படும் மகிடிக் கூத்துக்களில் வெளியிலிருந்து வந்தவர்களுடன் விட்டுக் கொடுத்து இணங்கிப் போகும் முடிவுகள் வருகின்றமை குறிப்பிடத்தக்கதாக உள்ளன.

இவ்வாறே ஊரிலுள்ள அதிகாரத் தரப்புக்கள் மத்தியில் முரண்பாடுகள் வரும் போது அம்முரண்பாடுகளைத் தமது நலன்களுக்குச் சாதகமான வகையில் பயன்படுத்தும் சந்தர்ப்பவாத மனோ நிலையும் மகிடிக் கூத்துக்களில் வெளிக்காட்டப்படுகின்றன. இத்துடன் அதிகார

மகிடிக் கூத்தானது, சித்திரைப் புதுவருடம் மற்றும் கிராமங்களின் முக்கிய நிகழ்வுகள் நடக்கும் போது ஊரில் எல்லோரிடமும் பணம் சேர்த்து கிடைக்கும் பணத்தைக் கொண்டே ஆடப்பட்டு வருகிறது.

கிராமத்திலுள்ள அனைவரும் கூடக்கூடிய இடவசதியைக் கருத்திற் கொண்டே நிகழ்த்து இடம் தெரிவு செய்யப்படுகிறது. நல்ல சூரிய ஒளியில் ஆரம்பித்து இருண்டு போன பொழுதில் நிறைவுக்கு வருகிறது.

ஆற்றுகை இடம் என்பது களரிகளோ, மேடைகளோ இல்லாத மட்டமான தரையாகவே இருக்கும். அதில் தமக்குத் தேவையான அமைப்புகளை கலைஞர்கள் நிலத்தின் கீழேயே ஏற்படுத்திக் கொள்கின்றனர். ஆற்றுகை இடத் தினைச் சுற்றி பார்வையாளர்கள் நின்றும் இருந்தும் பார்ப்பதற்கேற்ற விதத்தில் வட்ட வடிவத்தில் கயிறு கட்டப்பட்டோ அல்லது வரையறைகளை வைத்தோ ஏற்பாடு செய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுகையிடத்தின் மத்திய பகுதியில் கமுகு மரம் நடப்பட்டு அம்மரத்தின் முன்னால் பெரிய கும்பம் ஒன்று வைக்கப்படும். இக்கும்பத்தினைச் சுற்றி நான்கு பூசாரிகளும் கமுக மரத்தின் முன்னால் ஒரு பூசாரியும் அமர்த்தப்படுவார்கள். பூசாரிகளாக சிறுவர்களே வேடமிட்டிருப்பார்கள். கமுகு மரத்தின் மற்றைய பகுதியில் மூன்று கிடங்குகள் வெட்டப்பட்டு அதற்குள் நிற்பவர் தெரியாத வகையில் சீலையால் மறைக்கப்பட்டிக்கும். இக்கிடங்குகளின் முன்னால் கமுகு மரத்தினை நோக்கியபடி ஒருவர் பின் ஒருவராக முனிவர்கள் தியானத்தில் மூழ்கியிருப்பார்கள்.

அவ்வேளையில், வேடுவர்கள் அல்லது குறவர்கள் போல் வேடமணிந்த ஒரு கூட்டம் தமது செல்லப் பிராணிகளான குரங்குகள் (மாறுவேடம் அணிந்த சிறுவன்), பாம்புகள் சகிதம் பற்றைக் காடுகளிற்குள்ளிருந்து வருகை தருவார்கள். அவர்களது வருகையினை மக்கள் ஆர்வத்துடனும் சுவாரசியம் கலந்த மகிழ்வுடனும் இரசிப்பார்கள். இன்றைய காலத்து சபையோருடன் உரையாடும் வகையான நாடகப் பாணிபோல் பார்வையாளர்களுடன் உரையாடுவர்.

அப்போது, உடையார் தனது உதவியாளுடன் வந்து புதிதாக ஊருக்குள் நுழைந்துள்ள மற்றொரு குழுவான மலையாள மந்திரவாதிகளுடனும், ஆதி மனிதர்களுடனும் உரையாடி, பின் தவத்திலிருக்கும் பூசாரிகளுடன் உரையாடுவார். அவரது செயற்பாடுகள் மக்களை சிரிப்பூட்டி மகிழ்விப்பதாக இருக்கும்.

தங்களது உரையாடலை, உடையார் மக்களுக்கு அறிவிப்பார். ''இஞ்ச புதிசா வந்துள்ள ஆதிமனிதர்கள் இந்தா இருக்கும் பூசாரிமாரைத் தமது மந்திர வித்தைகளால் கட்டுப்படுத்தி வெல்லப் போவதாக கூறுகின்றார்கள் அதத்தான் நான் பூசாரிமாரிட்ட சொன்னனான். இப்ப பூசாரிக்கும் வந்திருக்கிற ஆக்களுக்கும் மந்திர தந்திர போட்டி நடைபெறப்போகிறது. ஆரு வெல்லுவாங்க என்று பாருங்களன்'' என்று சொல்வார்.

உடையார் சொன்னபடி ஆதிவாசிகள் ஒன்றிணைந்து மந்திர தந்திரங்களால் பூசாரிகளின் உதவியாட்களாக வீற்றிருந்த சிறுவர்களை மயக்கமடையச் செய்வார்கள். பின்னர் ஆதிவாசிகள் பார்வையாளர்களுடன் உரையாடியபடி ஒரு வலம் வந்து, மீண்டும் பூசாரிகளுடன் மந்திர தந்திர வித்தைகளில் ஈடுபடுவார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் ஆதிவாசிகளின் பெண்களை பூசாரிகள் மந்திர வித்தைகளால் தமது பக்கம் கவர்ந்து இழுத்துக் கொண்டு, ஆதிவாசிகளை ஒருவருடன் ஒருவரை ஒட்டச் செய்து, அவர்களின் பெண்களுடன் அவர்களுக்கு முன்னாலேயே கொஞ்சிக் குலாவி மகிழ்ந்து கொண்டிருப்பர். ஆதிவாசிகள் மந்திரத்திற்கு கட்டுப்பட்டு சில நிமிடங்கள் நிலத்தைக் கிண்டுபவர்களாக மாறியிருப்பார்கள்.

பின்னர் மீண்டும் பழைய நிலைக்கு வந்து தமது பெண்களை நினைத்து வேதனையும் கவலையும்



மலையாள மந்திரவாதிகள், கும்பத்தை எடுக்க முயலும் காட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது மகிழ்ச்சிக்காக தம்முடைய பணத்தினைச் சேகரித்து ஆடும் மகிடிக் கூத்தை ஊர் மக்கள் எல்லோரும் தம்முடைய கலைவடிவம் என்ற அக்கறையுடன் பார்வையிடுவார்கள்.



பூசாரியால் ஏவப்பட்ட பூதத்துடன் சண்டையிடும் மலையாளிகள்.





அடைந்தவர்களாக மீண்டும் பூசாரிகளுடன் மந்திர தந்திர வித்தைப் போரில் ஈடுபடுவார்கள். பூசாரிகளுடன் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கும் ஆதிவாசிப் பெண்கள் பூசாரிகளை உதைத்துத் தள்ளிக் கொண்டு தமது இனத்தாருடன் இணைந்து கொள்வர்.

இதையடுத்து ஆதிவாசிகள் பெரிய கும்பத்தினை எடுக்கும் முயற்சியிலீடுபடுவர். அதைத்தடுக்க பூசாரிமார் மந்திர வித்தைகளை செய்வார்கள். ஆதிவாசிகள் கும்பத்தினை நெருங்கும் போது கும்பம் திடீரென சூழலும். மீண்டும் முயல்வர். இறுதியில் கும்பத்தினை கைப்பற்றிக்கொள்ளும் ஆதிவாசிகள் ஆரவாரித்து ஒரு சுற்றுச் சுற்றி வருவர். இதன்போது உடையார் ஆதிவாசிகளுக்கும் பூசாரிகளுக்கும் இடையில் உரையாடல்களை நடத்துவார்.

பூசாரிகளுக்கும் ஆதிவாசிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் முடிவில் கமுகு மரத்தினைக் கைப்பற்றுவதே இறுதி வெற்றியாக அமையும் என உடையாரால் அறிவிக்கப்படும். இதன்படி கமுகு மரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஆதிவாசிகள் ஈடுபடுவர். கமுகு மரத்தினை ஆதிவாசிகள் அண்மித்ததும் பூசாரிகள் அவர்களை மரத்துடன் இணைத்துக் கட்டி விடுவார்கள். ஆதிவாசிகள் பூசாரிகளிடம் கட்டுண்டவர்களாக, ''இனி உங்களது பெயர் சொல்லும் இடங்களில் தங்க மாட்டோம்'' எனச் சத்தியம் செய்து விடுதலை பெற்றுச் சென்று விடுவர். இது மகிடியின் கதையாக அமைந்து இருக்கிறது.

ஆரம்பத்தில் சொன்னது போல் இரு வகை. அதாவது, ஒரு சமூகம் வெளியில் இருந்து வருபவர்களை கும்பத்தினை எடுப்பதுடன் மகிடியை முடித்து ஏற்றுக் கொள்வதாகவும், மற்றைய சமூகம் கமுகு மரத்தினை எடுக்க வேண்டும் எனக் கூறி தோற்கடித்து விரட்டு வதாகவும் கதை முடிவு அமைந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'மதுரகீதவாணி என்.சி.வசந்தகோகிலம்'

- பத்மா சோமகாந்தன்

தெலுங்கு மொழியிலும் சமஸ்கிருத மொழியிலும் அமைந்த பாடல்களைப் பாடுவதனாலேயே இசைப்புலமையின் உச்சத்தைத் தொடமுடியும் என்ற போலி மயக்கத்தில் சிலர் ஆழ்ந்திருந்த வேளையில் தண்டபாணிதேசிகர் போன்ற பெரும் இசை வல்லாளர்கள் சென்னையில் தமிழ் இசைச் சங்கத்தை அமைத்துத் தமிழ்ச் சாகித்தியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழிசையையே அதிகம் பாடி வந்தனர். அக்குழுவினரோடு இசைந்து தமிழிசையை முன்னெடுப்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு தமிழிசையுலகில் தன் முத்திரையைப் பதித்தவர் 'மதுரகீதவாணி' என்.சி.வசந்தகோகிலம் அவர்கள்.

'காமாக்ஷி' என்ற அம்பாளின் அழகிய பெயரையே இயற்பெயராகக் கொண்ட 'மதுரகீதவாணி'க்கு வசந்த காலத்தில் இயற்கையின் இனிமையை இவ்வுலகிற்கு உணர்த்துவது போன்று கூவும் குயிலின் இனிய கானத்திற்கு உவமையாக்கியே 'வசந்தகோகிலம்' என்ற பெயர் இடையிட்டு வந்தது. 'நாகபட்டினம்' சந்திரசேகர வசந்தகோகிலம் என்ற இவரது முழுப்பெயரின் சுருக்கமே என்.சி.வசந்தகோகிலம் என்பது.

கேரள மாநிலத்தில் கொச்சியிலுள்ள இரிஞ்சாலக் குடா என்னும் ஊரில் 1919ஆம் ஆண்டு இவர் பிறந்தார். சிறுமியாக இருக்கும்போதே இவரது பெற்றோர் தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகை பட்டினத்திற்குக் குடிபெயர்ந்தனர். இயற்கையிலே இனிய குரல் வளமும் எதையும் நுட்பமாக அவதானித்துப் பாடும் வல்லமையும் மிக்க காமாக்ஷியைப் பெற்றோர் நாகையிலிருந்த கோபால ஐயரிடம் இசைகற்க அனுப்பினர். அவரே வரன் முறையாகக் காமாக்ஷிக்கு கர்நாடக இசையை நன்கு கற்பித்து நிறைவு செய்தார். இளமையில் இருந்தே பல வருடங்கள் ஒரே குருவிடம் மிக அவதானமாகவும் தங்குதடையின்றியும் பாடங் கேட்டதால் காமாக்ஷி கர்நாடக சங்கீதத்தில் நல்ல தேர்ச்சி பெற்று இசையுலகில் பிரகாசிக்கும் நட்சத்திரமாக மிளிர்ந்தாள். இவளுடைய இசைக் கல்வி ஓரளவு பூரணமானதும் இவர்கள் குடும்பம் சென்னையில் குடியேறியது.

சென்னையிலே இவருடைய இசைக் கச்சேரிகள் பல மேடைகளில் அரங்கேறின. வசந்த கோகிலத்தின் இனிய குரலும் அழகிய தோற்றமும் கர்நாடக இசைக்கே மெருகூட்டுவதுபோல அமைந்தன. இவரது கச்சேரி எங்கு இடம் பெற்றாலும் அங்கே மக்கள் வெள்ளம் போல் கூடினர். சென்னையிலிருந்த சங்கீத சபாக்கள் எல்லாம் தவறாமல் இவரது இசைக் கச்சேரிகளை ஏற்பாடு செய்தன.

இவர் தனது 19ஆவது வயதிலே வாய்ப்பாட்டு இசைக்காகச் சென்னை மியூசிக் அக்கடமியின் ஆண்டு விழாவில் பலத்த போட்டியின் மத்தியில் பாடி முதல் பரிசினைப் பெற்றார். அவ்விழாவிற்குத் தலைமையேற்று நடாத்தியவர் அரியக்குடி இராமனுஜ ஐயங்கார். அத்தகைய மேதையிடமே தனது முதலாவது விருதைப் பெற்று அதிர்ஷ்டசாலியானார்.

குரலின் இனிமை, பாடும் திறமை, சுருதி சுத்தம், சரியான உச்சரிப்பு, எந்த ஸ்தாயியும் தொட்டுப் பேசும் அசாதாரண சாரீரம், நவரசங்களும் குரலில் வெளிப்படும் நளினம் என எல்லாம் ஒன்றிணைந்த இசை வளத்தால் இளமையிலேயே புகழின் உச்சியை அடைந்தார். இவரது இசைத்திறமைக்காக 'மதுரகீதவாணி' என்ற பட்டத்தைச் சங்கீத சபா அளித்து கௌரவித்தது. இவ்விருதினை வசந்த கோகிலம் அவர்களுக்கு அளித்து கௌரவித்தவர் கர்நாடக இசையில் புகழ்பூத்த இசைமேதை டைகர் வரதாச்சாரியார் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







'ஏன்பள்ளி கொண்டீரையா?', 'ஆனந்த நடனம் ஆடினார்', 'தந்தை தாய் இருந்தால் உமக்கிந்நத் தாழ்வெல்லாம் வருமோ ஐயா', 'நித்திரையில் வந்து நெஞ்சில் இடம் கொண்ட உத்தமன் யாரோடி' என அருமையான பாடல்களையெல்லாம் பாடி இசைப் பிரியர்களின் மனதைக் குளிர வைத்த மதுரகீதவாணி தனது இசையைக் பாடி கேட்டு மகிழும் வகையில் பல பாடல்களை இசைத்தட்டுகள் மூலமும் வெளிக்கொணர்ந்துள்ளார். கவர்ந்திழுக்கும் இனிய குரலும் ஈர்ப்பும் அழகிய தோற்றப் பொலிவும் கொண்ட இந்த மதுரகீதவாணியைச் சினிமாவும் விட்டு வைக்கவில்லை. சினிமா ரசிகர்களும் கூடத்திரை இசைகள் மூலம் இவரது மென்மையான இசைக் கேட்டு மகிழக் கூடிய வகையில் 'குழலோசை கேட்குதம்மா', 'பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால் (பாரதியார் பாடல்)', 'கலைவாணி அருள் புரிவாய்', 'கண்ணா வா மணிவண்ணா வா', 'எப்போ வருவாரோ, எந்தன் கலி தீர', 'இன்பம் இன்பம் ஜெகமெங்கும்' எனப் பெருந்தொகையான பாடல்களைச் பாடியதுடன் சினிமாவில் நடிப்பதிலும் கூட ஈடுபட்டார்.



'சந்திரகுப்த சாணக்கியா' என்ற படத்தில் இளவரசி சாயா தேவியாக நடித்தார். 'வேணுகானம்' என்ற படத்திலும் தொடர்ந்து நடித்தார். இவை 1940களில் வெளிவந்தன. ஒரு வருடத்தின் பின் 1942இல்'கங்காவதார்' என்னும் படத்தில் தோன்றினார். 'ஹரிதாஸ்' என்ற படத்தில் எம்.கே.தியாகராஜபாகவதருடன் நடித்ததோடு 1946இல் ஹொன்னப்ப பாகவதருடன் 'வால்மீகி', 'குண்டலகேசி' என்ற படங்களிலும் நடித்து மக்கள் மனதிலும் இடம் பிடித்துக் கொண்டார். 'கிருஷ்ண விஜயமே' இவர் இறுதியாக நடித்தபடமாகும்.

இவரது இசைப்பிரவாகம், நடிப்பின் பரிமளிப்பு, அக்கால சூழ்நிலை என்பவற்றை ஏற்றுக் கொள்ள முடியாத இவரது மணவாழ்க்கை தோல்வியையே தொட்டு நின்றது. இவரை மணம் செய்தவர் அதிருப்தியுற்றதால் பிரிவு ஏற்பட்டது. பின்னரும் திரைப்படத் துறையைச்சார்ந்த சதாசிவம் என்பவரைத் திருமணம் செய்து வாழ்க்கையை வளமாக்க முனைந்த வேளையிலே காசநோய் இவரைப் பற்றிக் கொண்டது. உடல்நிலை வெகுவாகப்பாதிக்கப்பட்ட வசந்த கோகிலம் சென்னையிலே தான் வாழ்ந்த கோபால புரத்திலுள்ள வீட்டிலே மரணத்தைத் தழுவிக் கொண்டார். இறக்கும்போது இவரது வயது 32. இளமையில் இவ்வுலகை நீத்தாலும் தன் இனிய குரல் வளத்தால் இசையுலகை நிரப்பிய வசந்தகோகிலத்தின் இசை இன்றும் செவிகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோயில்

- இ.அச்சுதபாகன் பி.ஏ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ்ப்பாணம் கோவிற் பற்றில் திருநெல்வேலி பல திருப்பதிகளை தன்னத்தே கொண்டு கோவில் நகர் எனப் போற்றக் கூடிய வாறு சிறப்புப்பெற்று விளங்குகிறது. அதில் திரு நெல்வேலியின் மையப்பகுதியில் அம்மன் வீதியின் மேற்குப் புறத்தில் அமைந்துள்ள தலங்காவற் பிள்ளையார் தேவஸ்தானம் நல்லை நகர் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் விளங்கிய தமிழரசின் தலைநகராக இருந்த காலத்தில் (கி.பி.1241 - கி.பி.1621) அந்நகர் மேற்குக் கோட்டை வாசலில் காவற் தெய்வமாக விளங்க அமைக்கப்பட்ட கோயிலாகும்.

முதற்கண் திருநெல்வேலி என்ற ஊரில் பெயர் பற்றி ஆராயப்புகின் திரு என்பது சிறப்பு, தெய்வீகம், செல்வம் என்று பொருள்படும். நெல் விளைகின்ற இடத்தை எல்லையாக அல்லது இடமாகக் கொண்டவூர் என்பதால் திருநெல்வேலி எனப்பட்டது என்பர். மருத நிலத்தின் இலக்கணப்படி அமைந்தவூர். பல ஞானிகளும் தொழில் வல்லாரும் கலை வல்லாரும் வாழ்ந்தவூர் திருநெல்வேலி. பசுவதைக்கு எதிராக நாட்டை விட்டே தமிழகம் சென்ற ஞானபிரகாச சுவாமிகள் வாழ்ந்தவூர். நிற்க!

நல்லூர் இராசதானியின் நாற்புறமும் சதுரமான கோட்டைச் சுவர் கட்டப்பட்டிருந்தது. அது ஆள்வோள் கட்டு என அழைக்கப்பட்டது. நான்கு வாயிற் புறமும் நான்கு விநாயகர் ஆலயங்கள் கட்டப்பட்டன. அவ்விடங்களில் கோட்டையின் வாசல்கள் இருந்தன. கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாயில்களுக்கு அணித்தாய் நான்கு புறமும் காவற் கோட்டைகளும் அமைக்கப்பட்டிருந்தன. பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் தோம்புகளில் அரண்மனை பகுதிகள் இருந்த பகுதியிலுள்ள காணிகள் மாளிகை என்றும் வாயிற் புறங்களிலுள்ள காணிகள் கோட்டைவாசல் எனவும் பதியப்பட்டன.

கிழக்குப் புறமிருந்த விநாயகர் ஆலயம் வெயிலுகந்த பிள்ளையார் கோவில் எனவும், மேற்கு புறத்துத் தலத்தை காவல் செய்பவரான விநாயகப் பெருமான் தலங்காவல் விநாயகர் எனவும் அழைக்கப்பட்டார். வட திசை வாயிலில் சாலை கற்ப விநாயகர் ஆலயம் அமைந்திருந்தது. தென் திசையின் கண் பெருங்கோவிலும் 3ஆம் கைலாசம் என கைலாச மலை விதந்தோதும் கைலாசநாத சிவன்கோவில் பரிவாரமூர்த்தியாக விளங்கும் கையிலை விநாயகர் கோயிலும் சிறப்புப்பெற்று விளங்கியது.

கோட்டை வாயில் தலங்காவலனாக அப்பெருமானுக்கு நம் தமிழ் அரசர் கோவிலெடுத்த தத்துவ நோக்கையும் இவ்விடத்தில் சிந்தித்தல் உசிதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலங்காவல் விநாயகரது அரசர் கால கோவில் என்ன ஆனது என்று தெரியவில்லை. போர்த்துக் கேயர் ஏனைய கோவில்களை இடித்தழித்தது போல் இதையும் அழித்தார்களா என்பதும் தெரியவில்லை.

தலங்காவல் பிள்ளையார் கோவிலுக்கு 1840ஆம் ஆண்டில், சில அடியார்களால் தரும சாதனமாகக் கொடுக்கபெற்ற காணி உறுதியில் 'ஸ்ரீகாயா ரோகண மூத்த நயினார்' என்ற பெயர் சொல்லப் பட்டிருக்கின்றது. அத்துடன் ஆலயத்தின் கிழக்குப் புறமாக பழைமையான அணிஞ்சில் மரம் ஒன்று நின்றதாகவும், அதனால் அணிஞ்சிலடிப்பிள்ளை யார் என்று அழைக்கப்பட்டதாகவும் தனக்கு ஒரு பெரியார் கூறியதாக 1988 ஆம் ஆண்டு கும்பாபிஷேக மலரில், ஆலய அறங்காவலரும் ஆலய பிரதமகுருவுமான அமரர் சிவஸ்ரீ. நா.சண்முகரத்தினக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி தெற்கில் அமைந்திருக்கும் 'நீலாயதாட்சி சமேத காயாரோகண பரமேஸ்வரர்' என்ற சிவபெருமான் தேவஸ்தானத்துடன் இணைந்து அப்பெருமானின் திருக்குமாரர் என்ற கருத்திலே காயாரோகணமூத்த நயினார் என்ற திருநாமம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அச்சிவன் தேவஸ்தானமும் அதற்கு இடப்புறம் அமைந்திருக்கும் முத்துமாரியம்பாள் தேவஸ் தானமும் அதன் முன்புறம் அமைந்துள்ள பரவைக் குளமும் நல்லூர் அரசர் காலத்தையது என்பாரும் உளர். கோவில் வீதியும் அம்மன் வீதியும் இணைந்த வீதியின் மேற்குப்புறம் தலங்காவற் பிள்ளையாருக்கு தென்புறம் காயரோ கணரும் முத்துமாரியும் கோவில் கொண்டருள, வடபுறம் பத்திரகாளி அம்மன் தேவஸ்தானமும் சிவகாமசுந்தரி அம்மன் தேவஸ்தானமும் விளங்க, விநாயகப் பெருமான் எழுந்தருளியுள்ளார்.

1918ஆம் ஆண்டு பங்குனி மாதம் ஊரிலுள்ள பெரியவர் ஒருவரின் பணியால் கல்லினால் கர்ப்பகிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகிய மூன்றும் கட்டப்பெற்று ஊரிலுள்ள அடியார் களின் உதவியுடன் கும்பாபிஷேகம் நடைபெற்றது.


பிற்சந்ததியில்லாத ஒரு பெரியாரின் சொத்துக்களை அவரது உறவினர்கள் எடுத்துப் போக கணிசமான அளவு செம்புத் தகடுகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் எஞ்சியிருந்தன. காலஞ்சென்ற பெரியவரின் உறவினர்களிடம் பிள்ளையார் கனவில் தோன்றி, பெரியாரின் சொத்தில் தனக்கு பங்கு இல்லையா என்று கேட்டாராம். அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஆலய பிரதம குருக்களிடம் வந்து நடந்தவற்றைக் கூறி, அவரை அழைத்துச் சென்று செம்புத் தகடுகளை ஒப்படைத்தனர். ஊரவர் உதவியுடன் கொடித்தம்பம் செய்யப்பட்டு மகோற்சவம் ஆரம்பமானது. இது 1934ஆம் ஆண்டு நடைபெற்றது.

கோவிலில் மூலவர் மேற்கு திசை பார்த்து எழுந்தருளியுள்ளார். ஆலயத்தின் வெளிச்சுற்று பரந்து விஸ்தாரமாக உள்ளது. ஆல், அரசு, அத்தி, வில்வம், பனை, தென்னை போன்ற மரங்கள் சுற்றுப்புறத்தில் உள்ளன.

1940ஆம் ஆண்டளவில் அடியவர்களின் உதவியுடன் பெருமானுக்கு திருத்தேர் ஒன்று செய்யத் தொடங்கினர். அத்தேரை ஸ்தபதி நாகலிங்க ஆச்சாரியார் தன் குழுவினருடன் திறம்பட செய்தார். பொறியியல் நுட்பம் நிறைந்த தேர் இதுவாகும். 1942ஆம் ஆண்டு வெள்ளோட்டம் நடைபெற்று, பெருமான் அதில் எழுந்தருளி வலம் வந்தார்.

தொடர்ந்து வரும் காலங்களில் உட்பிரகாரம், முகப்பு மண்டபம் என்பன அமைக்கப்பட்டன. 1968ஆம் ஆண்டு பரிவாரமூர்த்தியாக சனீஸ்வரப் பெருமானையும் ஸ்தாபித்து கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1980களில் பின் உற்சவம் பதினைந்து நாள்களாக ஆக்கப்பட்டது.

இவ்வாலயத்தில் விநாயகர் சஷ்டி விரதம், விநாயகர் சதுர்த்தி உற்சவம் என்பன சிறப்பாக அனுட்டிக்கப்படுகின்றன. யாழ்ப்பாண கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என்று கூறப்படுவதற்கு இணங்க இங்கு கந்தபுராணப் படிப்பு நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

காலத்திற்கு காலம் பல சமய சொற்பொழிவுகள், வில்லிசை போன்ற நிகழ்ச்சிகள் மூலம் சமய அறிவு ஊட்டப்படுவதுடன் சமய அறிவுப் போட்டிகளும் நடத்தப்பட்டுகின்றன. 1999 ஆம் ஆண்டு பெருமானுக்கு திருமஞ்சம் இராசையா குடும்பத்தினர் உபயமாக ஸ்தபதி சற்குருநாதன் ஆச்சாரியாரால் அழகுற அமைக்கப்பட்டு, திருவிழாக்கள் 18 நாட்களாக அதிகரிக்கப்பட்டு 12ஆம் நாள் மஞ்ச உற்சவம் நடைபெறுகின்றது. வருடாந்த உற்சவம் ஆனிச் சதயத்தை தீர்த்த உற்சவமாகக் கொண்டு நடைபெறுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகரும் இலங்கையின் ஆதிக்குடிகளும்

## மணிபல்லவம் எனப்படும் நயினாதீவு-4

- கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் ,
முன்னாள் மொழித்துறைத் தலைவர், சப்ரகமுவ பல்கலைக்கழகம்.





(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

உலகின் பல்வேறு பாகங்களிலும் நாகரிகம் முதலில் தோன்றிய இடங்களில் நாகர்கள் வாழ்ந்த தாகப் பெறப்படுகின்றது. எகிப்து, கிரேக்கம், மொசப்பட்டேமியா, உரோமாபுரி, இந்துநதிப் பள்ளத்தாக்கு, மத்திய அமெரிக்காவின் மாயா நாகரிகம் தோன்றிய இடம், ஆபிரிக்கா, ஜப்பான், கொரியா, கம்போடியா முதலிய இடங்களில் நாகர்கள் வாழ்ந்தனர். நாகர்கள் வாழ்ந்த இடங்களில் எல்லாம் நாக வழிபாடும் இருந்ததற்கான ஆதாரங்கள் பெறப்பட்டுள்ளன. நாகரிகம் என்ற சொல் 'நாகர்' என்ற சொல்லின் அடியில் பிறந்ததாக மொழியாளர்கள் கூறுகின்றனர். நாகர் + இயம் = நாகரியம் என்றாகி, அது திரிவுபட்டு நாகரிகம் என்றாகியது என்பது இவர்கள் கருத்து. நாகத்தை வழிபட்ட காரணத்தால் இப்பெயர் பெற்றனர் என்ற கருத்தும் உண்டு.

**இந்தியாவுக்கு நாகர் வருகை:**

ஆரியர்கள் வருவதற்கு முன்பே நாகர்கள் இந்தியா வுக்குள் வந்துள்ளனர். இந்தியாவின் வடபகுதியில் இருந்த நாகர்கள் ஆரியர் வருகையால் தெற்கு நோக்கித் தள்ளப்பட்டு டெக்கான் (தக்கணப்) பள்ளத்தாக்கு மற்றும் தெற்கில் இலங்கை வரை சென்றனர் என ஏ.கே.முசும்தர் (A.K.Musumdar) என்ற வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அவர் மேல்வருமாறு கூறுவர்.

'நாகர்கள் தீபத்தின் பர்மியர்கள் ஆசியாவில் ஏற்பட்ட அரசியல் பிரச்சினைகளினால் இவர்கள் இந்தியாவின் வடக்குப் பாதைகளின் ஊடாகத் தெற்கு நோக்கித் தள்ளப்பட்டனர்' அவர் மேல் வருமாறு கூறுகிறார்.

வட இந்திய இலக்கியங்கள் நாகர் பற்றிக் குறிப்பிடும்போது, அவர்கள் அழகானவர்கள், புத்திசாலிகள் என்றும், அவர்கள் வாழ்ந்த இடம் மிகுந்த செல்வச் செழிப்பு உள்ளது என்றும், தேவர்கள் கூட அவர்களை வென்று அவர்கள் செல்வத்தைப் பெற விரும்பினர் என்றும் கூறுகின்றனர். தமிழிலும் பிற மொழிகளிலும் உள்ள கதைகள் கூட நாகலோகத்துடன் தொடர்புடையனவாகப் புதையல் தேடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நாகலோகம் செல்வது வீரத்துக்கு ஒரு சவால் என்றும், நாக கன்னிகைகளை மணப்பது என்றும் பல கருத்துகளின் பின்னணியில் அமைந்திருந்தன. அத்தகைய கதைகள் எல்லாமே ஆரியர் வருகைக்கு முற்பட்டகாலச் சமுதாய அமைப்பிலேயே பின்னப்பட்டுள்ளன. மகா அலெக்சாண்டர் இந்தியாவுக்குப் படையெடுத்து வந்தபோது, 'தக்ஷா' எனப்பட்ட நாகரிகர்களைச் சந்தித்ததாகக் கூறியுள்ளனர். நாகபூர், அஸ்ஸாம், வங்காளம், ஒரிஸ்ஸா முதலிய இடங்களில் வாழ்ந்த நாகர்கள் வடக்கு நாகர்கள் என்றும், தென்னிந்தியாவில் வாழ்ந்த மறவர் அகமுடையர், கள்ளர் எனப்பட்ட இனத்தவர் தெற்கு நாகர்கள் வழிவந்தவர்கள் என்றும் கொள்ளப்படுகின்றது.

நாகர்கள் அடையாளமாகப் பல இடங்களில் பெயர்கள் உள. நாகர் கோவில், கம்பில்யாவிலும் வேறு பல இடங்களிலும் நாகர்கள் இருந்ததாகக் கூறுகின்றன. குப்தப் பேரரசின் அரசனான சமுத்திரகுப்தனால் அலகாபாத்தில் நிறுவப்பட்டுள்ள தூண்களில் பொறிக்கப்பட்ட பெயர்களில் நாகதத்தன், நாகசேனன் என்பவை இடம்பெற்றுள்ளன. நேபாளம், காஷ்மீர் ஆகிய இடங்களில் பண்டைய அரசர்களின் பெயர் வரிசையில் நாகர்ஜுனா என்ற அரசன் பெயரும் இடம்பெற்றுள்ளது. சாளுக்கிய அரசனான 2ஆவது புலிகேசியின் மருமகன் பெறாமகன் (Nephew) நாகவர்த்தனா எனப்பட்டவர், 2ஆம், 3ஆம் நூற்றாண்டுகளில் பலம் வாய்ந்த நாக அரசர்கள் நாகபூரில் வாழ்ந்தனர். இவர்கள் சாதவாகனர், பல்லவர் முதலானோருடன் திருமண உறவுகள் கொண்டிருந்தனர். கி.பி. 800ஆம் ஆண்டளவில் கூர்ச்சர்ளிகன் அரசனாக நாகபட்டன் என்பவன் இருந்தான். 11ஆம் நூற்றாண்டின் பின்னர் கூட இந்தியாவின் மத்திய மாகாணங்களில் போகவதி, பஸ்றுர் (Bogawathi, Bastur) எனப்பட்ட இடங்களில் இருந்த அரசுகள் புலியையும், பாம்பையும் சின்னங்களாகக் கொண்டு இருந்தன.

பண்டைய இந்தியா மகதம், நாகதீபம், குப்தம் என்ற மூன்று பெரும் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. நாகதீபம், நாவலந்தீவு என்றும் அழைக்கப்பட்டது. தென்னிந்தியாவின் பெரும் பகுதியை உள்ளடக்கிய பகுதியான நாகதீபம், போகவதி என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டிருந்தது.

இது காலப்போக்கில் பல பகுதிகளாகப் பிரிந்தது. இவ்வாறு பிரிந்து சென்ற பகுதிகளில் கடலாற் பிரிக்கப்பட்ட ஒரு பகுதியே இலங்கை எனக் கொள்ளப் படுகின்றது. இக்காரணம் பற்றியே இலங்கைக்கு 'நாகதீபம்' என்ற பெயரும் நிலைத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மட்டக்களப்பு மான்மியத்தின் படி கலியுகம் பிறந்து 800 ஆண்டுகளில் நாகர் வந்தனர் எனப் பெறப்படுகிறது. அது கி.மு. 1883 (கி.மு. 19ஆம் நூற்றாண்டு) ஐந்தாம் நூற்றாண்டிலே விஜயன் இலங்கைக்கு வந்தான். அதற்கும் 1400 வருடங்களுக்கு முன்பிருந்தே (கி.மு. 3283 கி.மு.4ஆம் நூற்றாண்டு) ஈழத்தில் நாகர்கள் வாழ்ந்துள்ளனர். மகாபாரதமும், இராமாயணமும் கதைகளாகக் கொள்ளப்பட்ட போதும் நாகர்கள் என்ற இனத்தவர் இந்தியாவின் தென்கரையில் வாழ்ந்தனர் என்பதற்கு இவை ஆதாரங்களாகின்றன.


இவ்வாய்விலே வரலாற்றுக்கு முற்பட்ட காலம், வரலாற்றுக்காலம் (பிற்பட்டகாலம்) என வரும் விடயங்கள் அவதானத்துக்குரியன. நாகர்களது வரலாறு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தது. நாகர், இயக்கர், வேடர் எனும் ஆதிவாசிகள் பற்றியது. பிற்பட்டகால வரலாற்றாசிரியர்கள் தத்தம் அறிவு, ஆளுமை, நுண்ணறிவு, இயல்புகள், கற்பனைகள், நுட்பமுறைகள் என்பனவற்றைப் பயன்படுத்தியே வரலாற்று ஆவணங்களைச் சான்றுகளாகத் தந்துள்ளனர். நூல்கள், கட்டுரைகள், கல்வெட்டுகள், பிறர் குறிப்புகள் என்பவற்றின் மூலம் கற்றறிய முடிகின்றது. ஆட்சி, ஆவணம், சாட்சி எனும் மூன்றாலும் இக்கட்டுரையின் கருத்துகள் உறுதிப்படுத்தப்படுகின்றது.

மகாபாரதமும் ஈழத்தின் வடபகுதியில் இருந்து நாகர்களது அரசு பற்றிய தகவலை நமக்கு தருகிறது பஞ்சபாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை மேற்கொண்டு இந்தியாவின் பல திருத்தலங்களைத் தரிசித்தவாறு தெற்கு நோக்கி வந்ததாகவும், அப்போது அவன் நாக இளவரசியான சித்திராங்கி என்பவளைச் சந்தித்து அவளை மணந்ததாகவும் கூறப்படுகிறது. அவன் இந்த இளவரசியைச் சந்தித்த தீர்த்தத் தலம் தற்போதைய கீரிமலை என்பது யாழ்ப்பண வைபவ மாலை தரும் தகவல். மகாபாரதக்காலம் கி.மு.200 எனக் கொள்ளப்படுகிறது. 'மணிபுரம்' இருந்த நாகர்களின் பிரதேசம் இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்திருக்க வேண்டும்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கி.மு. 6ஆம் நூற்றாண்டில் அதாவது சிவகணங்களின் முன்னோன் எனக் கருதப்படும் விஜயன் வருகையின்போது, நாகர்களின் பிரதான இருப்பிடங்களாக இருந்தவை ஈழத்தின் வட பகுதியும் வடக்கில் இருந்து மேற்குக் கரையோர மாகக் களனி வரையுள்ள பகுதிகளாகும். தெற்கே திசைமகாராமையிலும் கிழக்கே கொட்டியாரத்துக்கு அண்மையில் வரையிலும் மாத்தளைக்கு வடக்கே லேனதொர என்னும் இடத்திலும் நாக இராசதானிகளாகவும் தமக்கெனச் சொந்தமான அரசுகளைக் கொண்டவர்களாகவும் இருந்தனர் என்பது பௌத்தக் கதைகளில் இருந்தும் தெளிவாகின்றது. அவற்றில் புத்தர் மூன்று முறைகள் இலங்கைக்கு வந்ததாகக் கூறப் பட்டுள்ளது. அவ்வாறு அவர் வந்த ஒரு முறையின் போது, வடக்கில் மகோதரன் என்ற நாக அரசன் ஆட்சி செய்ததாகவும் இருவருக்கு மிடையில் ஒரு இரத்தினம் பதித்த சிம்மாசனத் துக்கு ஏற்பட்ட பிணக்கை அவர் தீர்த்து வைத்து அந்தச் சிம்மாசனத்தில் இருந்து அவர்களுக்கு உபதேசம் செய்ததாகவும் கூறப்படுகிறது. இதனை மேலும் வலியுறுத்துகிறது ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை.



'சங்ககால புலவர்கள் எனக் குறிப்பிடப் பட்டுள்ளோரின் பெயர்களில் நாகர் எனப்பெயர் பெறும் 18 புலவர்கள் பற்றி அறியமுடிகிறது. முதற்சங்ககாலத்து முரிஞ்சியூர்முடி நாகானார் தொடக்கம் அம்மெய்ய நாகனார். இளநாகனார், இனிசாந்த நாகனார், சங்ககாலப் பொற்கொல்லன் வெண்நாகனார், மதுரைப்பூதன் இளநாகனார், மதுரைப் பெருமதடி நாகனார், மருதநிலநாகனார், முப்போநாகநார், விரிச்சியூர் நன்நாகனார், வெள்ளைக்குடி நாகனார், என்னும் ஆண்பாற் புலவர்களும் அஞ்சியத்தை மகள் நாகையார், நன்நாகையார் எனும் இருபெண்பாற் புலவர்களும் நாகர் குடி வழி வந்த தமிழர்களே'.

'நாகர்கள்' எனப்படுவோர் நரமாமிசம் உண்போர். ஆடையின்றித் திரிவோர், என்ற கருத்துகளும் அவற்றிற்கெதிரான வகையிலே நற்பண்பினர். நாகரிகர்கள், புத்திசாலிகள், சமய ஒழுக்கங்களைக் கைக்கொள்பவர்கள், எழுத்தின் முன்னோடிகள், அறிவுடைமையையும் புலமையும் திறனும் மிக்க வர்கள் என்றும் கூறப்பட்டு வருகிறது. தத்தம் சார்பு நிலையில் இவை கூறப்படுவனவாயினும் 'உண்மை கண்டறிவது' என்பதே 'மெய்ப்பொருள் காண்பது' என்பது. மனித வரலாற்றிலே 'நல்லதும் கெட்டதும்', 'பலமும் பலவீனமும்', 'ஒளியும் இருளும்', 'நன்றுந் தீதும்' ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல இணைந்தே இயங்குகின்றன. தம்மையும் புகழுவோரும், புளுகுவோரும் (மனிதக் குணங்களிவை) என்ற இருவகையினர் மத்தியில் இயல்புகளை இயல்புகளாகவே நோக்கு வோரும் இல்லாமலில்லையல்லவா? அதாவது கருத்துகள் ஆய்வு முடிவுகளாகா. சமுதாயவியலில் இடம்பெறும் ஆய்வு முடிவுகளும் மாறிலிகளல்ல. ஒருவேளை விஞ்ஞான ஆய்வுகள் தீர்க்கமான முடிவுகளாயமையக் கூடும். ஆனால் கலை, பண்பாட்டு, வரலாற்றாய்வுகள் முடிந்த முடிவுகளல்ல.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெய்வ ஊர்திகள்
# அன்ன வாகனம்

- கலாபூஷணம் வித்துவான். வசந்தா வைத்தியநாதன்

அறிவிற் குறைந்த விலங்குகளும் பறவைகளும் ஆறறிவு மனிதனை விட சில விசேடத் தன்மை களையும் சிறப்பினையும் பெற்றிருக்கின்றன.

குறிப்பாக உருவத்தால் பெரிய யானை குணத்தாலும் சிறந்து விளங்குகின்றது. யானையின் துதிக்கை ஊறு உணர்ச்சியில் சிறந்தது. பெரிய மரங்களை சுமக்கும் துதிக்கரம், சிறு குண்டூசியைக் கூடத் தப்பாமல் எடுத்துவிடும். சிறு எறும்புகள், சிறு பூச்சிகள் கூட அதன் துதிக்கைக்குள் நுழையமுடியாது. தனக்கு உணவு கொடுத்துப் பாதுகாக்கும் பாகனின் அன்பினில் கட்டுண்டு தன்னைக் கட்டுவதற்கு இரும்புச் சங்கிலியை எடுத்துக் கொடுத்துவிடுகிறது. அதனுடைய சிறிய கண்ணிற்கு எதுவுமே தப்பாது. விலை உயர்ந்த தந்தங்களைத் தன்னகத்தே கொண்டது.

வலிமை மிகுந்த சிங்கம்- வனராஜா. அது தனக்குப் பசியெடுத்தால் மட்டுமே குகையினின்று வெளியே வந்து தனக்குத் தேவையான மானையோ, மரையை யோ அடித்து, அது வலது புறம் விழுந்தால் மட்டுமே உண்ணும்; இடது புறம் விழுந்தால் தனது வலிமைக்கு இழுக்கு என்று உண்ணாதாம்.

பசு, சாத்வீகத்தின் உறைவிடம். பசு தருவது பஞ்சகவ்யமட்டுமல்ல. அதன் வயிற்றிலுள்ள கோரோசனையும் சிறந்த மருந்து. உயிரோடு இருக்கும்போது மட்டுமல்ல, இறந்தும் கூட அதன் தோல் பாதணிக்குப் பயன்படுகிறது.

மருண்டு ஓடும் மான். இதன் வயிற்றிலே உற்பத்தியாகும் கஸ்தூரி நறுமணப் பொருள் மட்டு மல்ல, நோய் தீர்க்கும் நிவாரணியாகவும் இருக்கின்றது. மேலும் மானின் தோலாலாகிய ஆசனம் புலன் குவிவிற்குப் பயன்படுகிறது.

நத்தையின் வயிற்றில் முத்தும், நாகத்தினிடம் நாகரத்தினமும் கிடைப்பது மனிதனை விட விலங்குகள் உயர்ந்தவை என்பதைச் சுட்டுகிறது.

விலங்குகளைப் போலவே சில பறவைகளும் அபூர்வத்தன்மை கொண்டனவாய் விளங்குகின்றன. பச்சைக் கிளிகள், நாகணவாய்ப் பறவைகள் மனிதர்களைப் போலவே பேசுந்திறங் கொண்டன.

நன்மையும் தீமையும் கலந்துள்ள
இவ்வுலகில் உனது
அறிவினால் நல்லதையே தெரிந்து
நல்லதையே செய் என்பது
அன்னப்பறவை மனித குலத்திற்கு
விடுக்கும் செய்தியாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு உதாரணம், ஆதிசங்கரர் பலரையும் வாதத்தில் வென்று அத்வைதக் கொள்கையைப் பாரத மெங்கும் பரப்பி வரும் நேரத்தில் பூர்வமீமாம் சகரான குமாரிலபட்டரை வேதனையான சூழ்நிலையில் சந்திக்க நேர்ந்தது. தான் தெரிந்தே செய்த ஒரு தவறுக்குப் பிராயச் சித்தமாக சுய தண்டனை விதித்துக் கொண்டு உமிக்காந்தல் தீயில் தன் உடலைக் கருக்கிக் கொண்டு (துஷாக்கினி பிரவேசம்) துன்பம் அனுபவிக்கும் நிலையில் சங்கரர் தனது அத்வைதக் கொள்கையை எடுத்துக் கூறுகின்றார்.

மன அமைதி கொண்ட குமாரிலர் தன்னை விட பூர்வமீமாம்சகக் கொள்கையில் உறுதி கொண்ட மண்டனமிச்ரரை சந்திக்குமாறு கூறுகிறார். அத்துடன் அவரது இல்லத்தை அடையாளம் காட்டும் பொழுது மாஹிஷ்மதி நதிக் கரையில் எந்த வீட்டில் கிளிகள் வேதாந்த விளக்கங்களைக் கூறி தங்களுக்குள் பேசி வாதிடுகின்றதோ அந்த வீடே மண்டனமிச்ரரின் இல்லமாகும் என்று அடையாளம் காட்டும் நிலையில் கிள்ளைகளின் பேசும் திறமையை வியக்கின்றார்.

கொடிய நாகம், வேழம், அசுணம் போன்றவை இசை ஓர்குந் திறனுடையன.

நீரில் வாழும் பறவையான அன்னம் சிறப்புத் தன்மை கொண்டது. நீரையும் பாலையும் கலந்து வைத்தால் நீரை விடுத்து பாலை மட்டும் பிரித்துப் பருகும் தனித்தன்மையைக் கொண்டது. இதனை ஒரு பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*'கல்வி கரையில கற்பவர் நாள் சில*
*மெல்ல நினைக்கிற் பிணிபல - தெள்ளிதன்*
*ஆராய்ந்தமையுடைய கற்பவே*
*நீரொழியப் பாலுண் குருகில் தெரிந்து'*

அன்னப்பறவை மனித குலத்திற்கு விடுக்கும் செய்தி என்ன? நன்மையும் தீமையும் கலந்துள்ள இவ்வுலகில் உனது அறிவினால் நல்லதையே தெரிந்து நல்லதையே செய் என்பதாகும்.

கல்வி நிலைக்கும் இது பொருந்தும். கல்வியின் அதி தெய்வமாகிய கலைமகளும் அன்னத்தை வாகனமாகக் கொண்டதும் இக்காரணம் பற்றியேயாகும். கலைமகளுக்கு மட்டுமல்ல படைப்புக் கடவுளான பிரமனது வாகனமும் அன்னச் சேவலேயாகும்.

கேனோப நிடதத்தில் வரும் செய்தி இது. நான்முகனும் திருமாலும் தாங்களே பெரியவர், தாங்களே பெரியவர் என்று தருக்குக் கொள்ள சிவன் ஓர் அக்கினித் தூணாக வடிவெடுத்து, 'யார் எனது அடியையும் முடியையும் முதலில் காண்கிறார்களோ அவரே பெரியவர்' என்று கூற திருமால் பன்றியாய் திருவடியைத் தேடிச் செல்ல, வேதாவும் அன்னப் பறவை வடிவு கொண்டு திருமுடியைக் காணப் பறந்து சென்றார். இதனைக் கருவூர்த் தேவர்,

*'அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட*
*அங்ஙனே பெரியநீ சிறிய*
*என்னை ஆள் விரும்பி என் மனம் புகுந்த*
*எளிமையை யென்றும் நான் மறக்கேன்.'*

என்று போற்றுவார்.

அன்னப்பறவை மிக அழகானது. மிக மிக மென்மையானது. அன்னத்தின் நடை அழகை இலக்கியங்கள் புகழும். ஆண் அன்னமும், பெண் அன்னமும் புணரும் பொழுது உள்ள நெகிழ்வால் உதிர்க்கும், இணை புணர் அன்னத்தின் தூவிகளைக் கொண்டு அமைக்கும் மஞ்சம் ஹம்சதூளிகா மஞ்சம் ஆகும்.

மந்திரங்களில் சிறந்தது 'ஹம்ச மந்திரம்' இதனை 'அசபா மந்திரம்' என்றும் கூறுவர்.

அசபா என்ற சொல்லிற்கு 'ஜெபிக்கப் படாதது' என்பது பொருளாகும். மூச்சுக் காற்றை வெளிவிடும்பொழுது 'ஹம்' என்றும் உள்ளிழுக்கும் பொழுது, 'சம்' என்றும் செய்வதே ஹம்ச மந்திரமாகும். இதற்கு 'நான் அவன்' என்பது பொருளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடைவிடாத இந்த தியானம் சிவமாந் தன்மையை ஆன்மாவிற்கு வழங்கும்.

திருமாலின் இருதய கமலத்தில் தியாகேசப் பெருமான் வீற்றிருப்பதால் அவர் விடும் மூச்சுக்கேற்ப அசைந்தாடும் அசபா நடனப் பெருமானாக திருவாரூரில் விளங்குகின்றார்.

'நள- தமயந்தியின் நட்பிற்கு அன்னப்பறவை தூது சென்றதாக நளோபாக்யானம்' கூறும்.

அம்பிகையின் பல வாகனங்களிலும் அன்ன வாகனமே சிறந்ததாகக் கருதப்படுகிறது. மதுரையில் அம்பிகை மீனாட்சி அன்ன வாகனத்தில் பவனி வரும் அழகைக் காணக் கண் கோடி வேண்டும்.

இந்த அற்புத அழகைக் காளமேகப் புலவர் காணும் விதமே சுவை மிகுந்தது.

மதுரையையாளும் அரசி உமையவளுக்கு ஒரே கவலையாம். மதுராபுரிச் சொக்கருக்குப் பித்தம் பிடித்து அவர் பித்தனாகி, பிட்சாண்டியாகித் திரிவது கண்டு மீனாட்சிக்கு உண்ணவும் மனமில்லாமல் சோறு தண்ணீர் இறங்காமல் அலைகிறாளாம்.

*'மாயனார் போற்று மதுராபுரிச் சொக்க*
*நாயனார் பித்தேறி னாரென்றே - நேயமாம்*
*கன்னல் மொழி அங்கையற் கட் காரிகையாள் ஐயையோ*
*அன்ன மிறங் காமலலை வாள்'*

அன்னம் இறங்காமல் என்பதற்கு உணவு இறங்காமல் என்றும் அன்ன வாகனத்தை விட்டு இறங்க மனமில்லாமல் என்றும் இருபொருள்படும் படி பாடுவது காள மேகத்திற்கு அல்வா சாப்பிடுவது போல, மதுரை திருவீதியில் சுவாமி பிட்சாடன வடிவம் கொண்டு வரும்போது இறைவி அன்னவா கனமேறி வருவது எண்ண எண்ண இன்பம் பயப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வளம்கொழிக்கும் பாரம்பரியத்தில் ஆத்மாவின் வெளிப்பாடு

தமிழரின் தனித்துவ பண்பாட்டை பேணும் பழைய வீட்டு அலங்காரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிறிஸ்தவ பாரம்பரிய அலங்காரங்கள்; தேவதூதர்கள், வேதாகமம், குழந்தை இயேசுவின் உருவங்கள் உயிர்த்துடிப்பு மிக்க படைப்புகள்

இல்லிடங்களை மக்கள் வாழும் உறைவிடங்களாக மட்டும் கருதிவிடமுடியாது. அவை அந்நாட்டு மக்களின் பண்பாட்டை, கலையுணர்வை, சமூக ஒருங்கிணைப்பைப் பிரதிபலிக்கின்ற ஆடிகளாக விளங்குகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் உயர் பண்பாட்டுக்குரிய அரசர் காலத்தைய பழைமை வாய்ந்த பாரம்பரிய கட்டிடங்கள் நல்ல நிலையிலோ அல்லது அழிபாடுகளாகவோ காணக்கிடைக்கவில்லை.

இருந்தபோதிலும் பண்டைக்காலம் முதல் தமிழ்மக்களால் கட்டப்பட்டுவந்த திராவிட மற்றும் சோழர் கால கட்டிடக்கலைப்பாணியுடன் 15 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரான ஐரோப்பியர் கால பாங்குறு கட்டிடக்கலைப் பண்புகளும் கலந்து குடாநாட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாக தமிழர்களின் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பிரதிபலிக்கும் வகையில் சில இல்லிடங்கள் காணப்படுகின்றன.

இந்த வீடுகளை அவதானிக்கும்போது, போர் மற்றும் இயற்கை அழிவுகளை எதிர் கொண்ட நிலையிலும் பல வீடுகள் நூற்றாண்டைக் கடந்து தமிழர்களின் வாழ்வியல் பண்பாட்டை விதந்து கூறி நிற்கின்றன. பெரும்பாலும் நவாலி, மானிப்பாய், சண்டிலிப் பாய், சித்தன்கேணி, மூளாய், சுளிபுரம், சில்லாலை, வல்வெட்டித்துறை, கொக்குவில், உடுவில், மட்டுவில், சாவகச்சேரி, யாழ்ப்பாண நகரம், நல்லூர், கந்தரோடை, கொக்குவில், தீவகம் போன்ற இடங்களின் உட்பகுதிகளில் நமது பாரம்பரியங்களை எடுத்தியம்பும் பழைய வீடுகள் இன்றளவும் காணப்படுகின்றன. பெரும்பாலான வீடுகள் பழைமையைப் பாதுகாக்கும் மனப்பான்மையுடன் அக்கறையாக தரமாக பராமரிக்கப்படுகின்றன.

இந்தப் பழைய வீடுகளின் முகப்பு அலங்காரப் பண்பு இலங்கையில் வேறெங்கும் ஒரு இனத்தின் பாரம்பரிய தனித்துவச் சிறப்பைக் கூறும்அளவிற்கு காணப்படவில்லை எனலாம். யாழ்ப்பாணச் சமூக சிந்தனையில் வீடு கட்டுதல் என்பது முக்கியமான ஒன்றாகும். இந்த வீடுகளின் விஸ்தீரணம், பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருட்களின் தரம், முகப்பு மற்றும் நிலை, கதவு ஆகியவற்றிற்கான அலங்காரங்கள் ஆகியவற்றை சாதீயம், சம்பாத்தியம் (பொருளாதாரம்) போன்ற காரணங்கள் தீர்மானிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காற்றோட்டத்திற்காக வீட்டின் சுவர்களில் வைக்கப்பட்ட காலதர்



இயேசுவின் திருஇருதயத்தை அல்லது திருஅப்பத்தை பிரதிபலிக்கிறது



இயேசு பாலனுடன் கிறிஸ்தவ சின்னங்கள்.



கொடி, மலர், இலை கொண்ட அலங்காரம்



சமச்சீர் தூண் அலங்காரம்




இஸ்லாமிய கலாசார அலங்காரம்



தூண் அரங்காரம்





கொடிகள் மற்றும் இலை, மொட்டுக்கள் மூலமான அலங்காரம். வீட்டின் பெயரும் வீடுகுடிபுகுந்த திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளது. சமச்சீர் முறைமை அச்சொட்டாக பேணப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குழலூதும் கண்ணன். கொடி மற்றும் மலரிதழ் அலங்காரங்கள் மூலம் கலைத்துவமாக அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன் வீட்டினுடைய பெயரும் எழுதப்பட்டுள்ளது.



மலரைத் தாங்கியிருக்கும் அன்னப்பட்சிகள்



கிறிஸ்தவ பாரம்பரிய அலங்காரம்.




ஐரோப்பிய அலங்கார பாணி



வீட்டின் முன்முகப்பில் அமைக்கப்பட்டுள்ள கும்ப வடிவம். அதனுடன் கொடிவகை அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

சமூகத்தில் வசதி படைத்தவர்களே கல்வீடுகளைக் கட்டுவார்கள். ஒருவர் செல்வந்தர் என்பதைக் குறிக்க கல்வீட்டார் என்று விழிக்கும் மரபும் இருந்தது. கல்வீடுகளின் வருகையோடு யாழ்ப்பாண வீடு கட்டும் மரபில் பெரும் மாற்றம் ஏற்பட்டது எனலாம். கல்லால் வீடுகள் கட்டப்படும்போது ஒல்லாந்தருடைய கட்டிடப் பாணியில் அமைந்த விறாந்தை மற்றும் வாயில் முகப்பு முக்கிய இடம்பெற்றன. இதற்குக் காரணம் யாழ்ப்பாணத்தில் கல்லால் வீடுகட்டும் முறைமை ஒல்லாந்தர் காலத்திலேயே ஆரம்பித்தது.இன்றும் பாரம்பரிய டச்சுப் பிரதேசம் ஒன்றின் வீடுகளின் அமைப்புடன் யாழ்ப்பாணத்து வீடுகளின் கட்டிடப் பாணி வெகுவாக ஒத்துப்போகின்றது.

கல்வீட்டுப் பண்பாடு வருவதற்கு முன் யாழ்ப்பாணத்து வீட்டின் அமைப்பு ஒரு வளவுக்குள் இருந்த தொகுதியாகவே காணப்பட்டது. வீடு, கூடம், அடுப்படி, மாட்டுக்கொட்டில், கிணறு ஆகியவற்றைக் கொண்டதொன்றாக இருக்கும். வளவுக்குள் இதன் அமைவிடங்கள் சாஸ்திர முறைப்படி நிலம்பார்த்தே அமைக்கப்பட்டிருக்கும்.

குடாநாட்டு வீடுகளை ஒரு குறியீட்டால் காட்டவேண்டும் என்றால் அதற்கு அலங்கரிக்கப்பட்ட முகப்புச் சுவர் என்ற வடிவமே



வீட்டு வாசலின் முன் அமைக்கப்பட்டுள்ள தாமரை மலருடன் கூடிய அன்னப்பட்சி அலங்கார வடிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமாகும். அலங்கரிக்கப்பட்ட முகப்புச் சுவர் கட்டிடக்கலைத் திறத்தை மட்டும் காட்டுபவை அல்ல; அங்கு அழகியலுடன் கூடிய காலநிலை சார்ந்த அம்சங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது பருவக் காற்றுகளின் வீச்சு குடாநாட்டில் அதிகரித்துக் காணப்படுவது அதன் புவியியல் தன்மை. காற்றின் வீச்சு வீட்டிற்குள் உட்புகுந்து ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்காமல் இருப்பதற்காக வீட்டிற்கு முன்பாக முகப்புச்சுவர் எழுப்பப்படும் பாரம்பரியம் உருவாகியிருக்கலாம். உண்மையில் யாழ்ப்பாண சமூகத்தின் வாழ்நிலை அம்சங்களில் பௌதீக பண்பாட்டின் வரலாறு பற்றிய ஆய்வுகள் இல்லையென்று சொல்லுமளவில் உள்ளது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் கட்டப்பட்ட வீடுகளின் அமைப்பு முறையில் மாற்றங்கள் காணப்படுகின்றன. நவீன நாகரிக வீடுகள் மற்றும் அமெரிக்க பாணியிலமைந்த வீடுகள் ஆகியவை டச்சுப் பாணியை மேவிவரத் தலைப்பட்டன. இவற்றினுடைய முக்கிய அம்சம் ஒரு அமைப்புக்குள்ளேயே குளியலறை, கழிப்பறை, அடுக்களை ஆகியவற்றை அமைத்துவிடுவதாகும்.

நமது சிற்பங்கள் மேற்குலகு சிற்பங்களைப் போன்று வெறும் அழகிய காட்சிப் பொருட்களாக மட்டுமல்லாது காட்சிக்கும் அப்பால் சென்று கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் ஊட்டுகின்றன. பொதுவாக பாரம்பரியமான அலங்கார வடிவங்களான கும்பம், லக்ஷ்மி, மயிலுடன் நிற்கும் முருகன், குழலூதும் கண்ணன், யானை, பசு, பிறை, வேதாகமம், வானதூதர், இயேசுபாலன், சிலுவை, அன்னப்பட்சி, மயில், சிங்கம் போன்ற உருவங்கள் வீட்டின் முகப்பில் மற்றும் தூண்களில் செதுக்கப் பட்டிருக்கும்.



வீடுகளின் நிலை, யன்னல்கள் சுவர்களில் செய்யப்பட்டுள்ள பூங்கள் மற்றும் செடில்பலகை சித்திர வேலைப்பாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒல்லாந்தரின் கட்டிடக்கலையின் தாக்கம் யாழ்ப்பாண கட்டிடக்கலை பண்பில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின என்பதற்கான சான்றுகள் இன்றும் பல காணப்படுகின்றன. 18 ஆம் 19 ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட பெரும்பாலான வீடுகளின் கூரை அலங்காரம் தனித்துவம் பெறுகின்றன. உயரமான சுவர்கள் எழுப்பப்பட்டு அவற்றின் உச்சியில் சில அலங்காரங்கள் வைக்கப்பட்டுள்ளன. சுவரின் நடுப்பகுதி மற்றைய இரு ஓரப்பகுதிகளைவிட சற்று உயரமாக முக்கோண வடிவில் கட்டப்படும். உயரம் குறைந்த இரு ஓரப்பகுதிகளில் விலங்குகளின் சிற்பம் வைக்கப்படும். பொதுவாக யானை, சிங்கம் என்பனவும் உச்சியில் கலசம், நிறைகுடம் அல்லது விரியும் மொட்டு அல்லது உருண்டை வடிவிலமைந்த உலகம் என்பன வைக்கப்படும். இவ்வாறான கட்டுமானம் கிறிஸ்தவ ஆலயங்களை ஒத்ததாக கட்டப்பட்ட வீடுகளில் காணப்படுகின்றன.



பண்டைக்காலத்தில் சுண்ணாம்புக்கல் மற்றும் செங்கற்கள் அல்லது களிமண் என்பவற்றினாலேயே பெரும்பாலான கட்டிடங்கள் குடாநாட்டில் கட்டப்பட்டன. இவை காலப்போக்கில் அழிவடைந்துவிட்டன. இதன் காரணமாக எமது பண்டைய வரலாற்று படிமங்கள் பலவற்றை இழக்கும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலை மற்றும்
கொடிகளால்
அலங்கரிக்கப்பட்ட
தூணின் மேற்பகுதி.


வீட்டின் முகப்பில் இவ்வாறான கடவுளர்களின் அல்லது சமயம் சார்ந்த உயிரினங்களின் உருவங்கள் பொறிக்கப்படுவது 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் முதல் வழமையானதாக காணப்படுகின்றது. இதன்மூலம் தமது சமயம் சார்ந்த நிலையையும் அந்தஸ்தையும் வீட்டின் முகப்பு அலங்காரத்தினூடே தெரியப்படுத்தப்படுகின்றது. அத்துடன் கடவுளரின் உருவங்களுக்கு மேலும் அழகுசேர்க்கும் முகமாக தாமரைப்பூவிதழ், அல்லி மலரிதழ், கொடி அலங்காரங்கள், யாளி என்பன போன்ற திராவிடக் கலை அலங்காரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்கு முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய அம்சம் எந்தவகையான அலங்காரமாக இருந்தாலும் சமச்சீர்பேணுகைமிகநுட்பமாககையாளப்பட்டுள்ளது. இவற்றில் நிறைகுடம் மற்றும் அன்னப்பட்சி ஆகியவை இரண்டு விதமான வகைப்பட்ட அலங்காரங்கள் பின்பற்றப்பட்டுள்ளன. இதைப் போலவே தாமரைப்பூ இதழ் அலங்காரத்திலும் நான்கு வடிவங்கள் காணப்படுகின்றன.

காலனித்துவ ஆட்சியின் விளைவான அந்நியக் கலாசாரக் கூறுகளும் புதிய தொழில்நுட்பமும் கலந்து மாற்றம் கண்ட பாரம்பரிய அலங்காரங்கள் ஒரு தனி மனிதனின் ரசனையின் அடிப்படையில் உருவானவை அல்ல. அவை சமுதாயம் முழுவதினதும் ஆழமான அனுபவத்தின் அடிப்படையில் வளர்ச்சி பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**- பஸ்ரியாம்பிள்ளை ஜோண்சன்**




இலை மற்றும் கொடி
அலங்காரத்துடன்
சிங்கத்தின் தலை கொண்டு
அலங்கரிக்கப்பட்ட தூணின்
மேற்பகுதி (தாங்குபகுதி)



தாமரை இதழ் மற்றும் கொடி அலங்காரம்கொண்ட
இரட்டைத் தூண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கூவிளம் - வில்வை

- டாக்டர். திருமதி. விவியன் சத்தியசீலன், சிரேஷ்ட விரிவுரையாளர்



கூவிளம் என்று கபிலர் கூறிய சொல்லுக்கு நச்சிநார்க்கினியர் வில்வம்பூ என்று உரை கண்டார். இதுவே வில்வம் என்று வழங்கப்படுகின்றது.

*'யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை'* என்பதற்கிணைய சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்ய இதனைச் சூட்டுவர். மேலும் யாப்பிலக்கணத்தில் 'கூவிளம்', கூவிளந்தண்பூ' என்பன ஈரசை நான்கசைச் சீர்களுக்கு முறையே வாய்ப்பாடாகும்.

நற்றிணைப் பாட்டில் காணப்படும் 'விளாம்பழம் கமழும்' என்பது விளாம்பழத்தைக் குறிக்கும். அந்த 'விளம்' என்ற சொல்லுடன் 'கூட' என்ற எழுத்தைக் கூட்டிக் 'கூவிளம்' என்ற சொல் வில்வமரத்தைக் குறிக்கின்றது.

விளமும் கூவிளமும் ஒரே தாவர குடும்பத்தைச் சேர்ந்தவை. சிவபரம் பொருளுக்கு ஒரு பச்சிலை என்று கூவிளத்தின் இலைகளைக் கொண்டு வழிபடுவர். சுந்தரர் இதனைச் சிவபிரான் சூடும் மலராகப் பாடியுள்ளார்.

வில்வைமரம் சுமார் 10 - 12 மீற்றர் வரை வளர்ந்து சிறிது படர்ந்து காணப்படும். பெரும் கிளைகளைத் தவிர மற்றைய சிறு கிளைகளில் கிளைக்காம்புடன் இணைந்துள்ள முட்கள் காணப்படும். மூன்று இலைகள் ஒரு காம்பில் இணைந்திருக்கும் கூட்டிலை அமைப்பைக் கொண்டதாகும். பூக்கள் ஐந்து இதழ்கள் கொண்டதாகவும் நல்ல மணமுடைய சிறிது மஞ்சள் கலந்த வெண்ணிறத்தைக் கொண்டதாகவும் காணப்படும். பல விதைகளைக் கொண்டுள்ள தடித்த கடினமான ஓடுகளை உடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதைப்பிடிப்பான பழம் காணப்படும். இம்மரத்தின் சகல பகுதிகளும் மருந்திற்குப் பயன்படுத்தப் படுகின்றன.

**பயிரிடுதல்:**

நன்றாகப் பழுத்து விழுந்த விதைகளை முளைக்க வைத்து, கன்று சுமார் 3 செ.மீற்றர் உயரம் வளர்ந்தவுடன் பிடுங்கி தேவையான இடங்களில் நட்டுப் பயிரிடலாம். விதையை பயிரிடும் முன்பு விதையை சாம்பலுடன் கலந்து நன்கு தேய்த்து பயிரிடவும்.

**மருத்துவப் பயன்கள்**

மிக முக்கியமான பயனாக இது வெப்பகாலத்திற்கு உகந்த, பித்ததோஷக் கோளாறுகளை நீக்கக் கூடிய தன்மையுடைய பழங்கள், இலைகள், பூக்களைக் கொண்டது. வெப்பகாலமாகிய வைகாசி மாதத்தில் பூப்பதுடன் வெப்பம் உச்ச நிலையை அடையும் ஆனி, ஆடியில் காய்களும் பழங்களும் பெறக்கூடியதாக இருக்கும்.

★வில்வம் பழத்தின் சதையை சீனியுடன் அல்லது சர்க்கரையுடன் சேர்த்து சாப்பிட குடல் சம்பந்தமான கோளாறுகளுடன் மலபந்தம் நீங்கும்.

★வில்வம் இலையை கைப்பிடியளவு எடுத்து புதுச் சட்டியில் போட்டு லேசாக வதக்கி ஒரு தம்ளர் நீர் விட்டு நன்றாகக் கொதிக்க வைத்து இறக்கி, வடிகட்டி, அதில் பாதியை காலையிலும் மீதியை மாலையிலும் தொடர்ந்து 21 நாட்கள் குடித்து வர சகல விதமான பித்தக் கோளாறுகளும் தீரும்.

★பழச்சாற்றில் பனங்கற்கண்டு சேர்த்து கொடுக்க வயிற்றுக் கடுப்புத் தீரும்.

**நூறு கிராம் வில்வம்பழத்தில் உள்ள சத்துக்கள்**

புரதம் - 18 கி, கொழுப்பு - 0.3 கி, நார்ப்பொருள் - 2.9 கி, மாப்பொருள் - 31.8 கி, கல்சியம் - 85 மி.கி, பொஸ்பரஸ் - 50 மி.கி, இரும்பு - 0.6 மி.கி, தயமின் - 0.13 மி.கி, கியாசின் - 1.1 மி.கி, ரைபோபிளேவின் - 0.13 மி.கி, விற்றமின் 'சி'-8 மி.கி, பொட்டாசியம் - 600 மி.கி, தாமிரம் - 0.21 மி.கி, கரோட்டின் - 55 மைக்ரோ கிராம்

★வாய்ப்புண், வயிற்றுப்புண்களுக்கு வில்வம் பழத்துடன் சர்க்கரை சேர்த்து பிசைந்து வெறும் வயிற்றில் காலை, மாலை என தொடர்ந்து மூன்று நாட்கள் சாப்பிட நோய் தணியும்.



- சங்க இலக்கியப் பெயர் - கூவிளம்
- பிற்கால இலக்கியப் பெயர் - வில்வம்
- உலகவழக்குப் பெயர் - வில்வம்
- ஆங்கிலப் பெயர் - பீல்மரம்
- தாவரப் பெயர் - Aegle Marmelas







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★வில்வம்பூ, நன்னாரி சேர்த்து இள வறுப்பாக வறுத்து, இடித்து, பொடி தயாரித்து, கோப்பி போன்று பானமாக அருந்தி வர உடல் குளிர்ச்சியடைவதுடன் வெய்யில் காலத்திற்கு உகந்த பானமாகும்.

★முக்கால்வாசி முற்றிய வில்வங்காயினை கோது நீக்கி, நிழலில் உலர்த்தி, ஈரம் காய்ந்த பின் மிளகு, வெந்தயம் ஆகியவை சேர்த்து தேவையான அளவு உப்புத்தூள் கலந்து, ஊறுகாய் தயாரித்து உணவுடன் சேர்த்துக் கொண்டால் விரைவில் ஜீரணம் ஏற்படுவதுடன் மலபந்தமும் தடுக்கப்படுகின்றது.

★நன்கு முற்றிய வில்வை மரக்குற்றியில் தயாரிக்கப்பட்ட குவளையில் கைபிடியளவு



வில்வம் இலைகளை இட்டு, குவளை நிரம்ப நீர் விட்டு, இரவு முழுவதும் ஊறவிட்டு, மறுநாள் வெறுவயிற்றில் அந்நீரை வடித்துக் குடிக்க வயிற்றெரிவு, குன்மம் தீரும்.

**வில்லைக் குடுக்கை**

வில்வம் பழத்தில் துளைபோட்டு உள்ளிருக்கும் பழச்சதை, விதைகள் ஆகியவற்றை நீக்கிய பின், பழ உள்ளீட்டைச் சுரண்டி, துப்புரவு செய்து, உலர வைத்து, சித்தமருந்துகளை அடைத்து வைக்கும் குப்பியாக பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலமாக மருந்தின் தரம் மாறாமல் இருப்பதுடன் இடைத் தாக்கங்கள் ஏற்படாதும் தடுக்கப்படுகிறது.

**வில்வம் பூக்களின் மருத்துவ குணங்கள்**

வில்வம் பூவானது காயகற்ப மூலிகையாகும்.

★வில்வம் மலர்களைச் சேகரித்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். பின் அதனை இடித்துத் தூளாக்கிக் கொள்ளவேண்டும். இந்த தூளில் இரண்டு தேக்கரண்டி நெய் விட்டுக் குழைத்து, ஒரு நாளைக்கு இரண்டு வேளை உட்கொள்ள வேண்டும். தொடர்ந்து மூன்று நாட்கள் உட்கொள்ள பசிமந்தம் அகன்று நல்ல பசி உண்டாவதோடு கல்லீரல் கோளாறுகள், பித்த சம்பந்தமான நோய்களும் தணியும்.

★வில்வ மலர்களை பறித்த உடனேயே பச்சையாக அரைத்து, பசுப் பாலில் கலந்து, அதனுடன் சிறிது தேன் கலந்து உட்கொண்டாலும் உடல் குளிர்ச்சியடைந்து நல்ல பலனைக் கொடுக்கும்.

★ஒரு கைபிடியளவு காய்ந்த வில்வ மலர்களைச் சேகரித்து 150 மில்லிகிராம் நீரில் இரவு முழுவதும் ஊறவைத்து காலையில் வடிகட்டி குடிக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து மூன்று நாட்கள் குடிக்க உடற் சூடு தணிந்து, அதிக தாகம் அடங்கும்; பசி ஏற்படும்; மலச்சிக்கல் நீங்கும்.

★உலர்ந்த வில்வ மலர்களைத் தூளாக்கி, சலித்தெடுத்து, இரண்டு தேக்கரண்டி தூளை 150 மில்லி பசுவின் பாலில் விட்டு, அரைத்து தேனைக் கலந்து உட்கொண்டு வர நரம்புத் தளர்ச்சி நீங்கும். மூளையில் இயக்கம் சுறுசுறுப்படையும். இரத்த ஓட்டம் சீராகும்.





★காய்ந்த வில்வ மலர்களைப் புளி சேர்க்காமல் ரசமாகத் தயாரித்து உணவுடன் சேர்த்து உண்டால் குடல் இயக்கம் வலிமைபெறும். குடல் தொடர்பான நோய்கள் வராது. மலச்சிக்கலும் அகன்றுவிடும்.

**வில்வம்பூ கோப்பி**

வில்வம் பூ (உலர்ந்தது) - ½ கிலோ, கொத்த மல்லி - ½ கிலோ, ஏலம் - 25 கிராம், சுக்கு (வேர்க்கொம்பு) - 20 கிராம், நற்சீரகம் - 100 கிராம் வில்வம்பூ தவிர மற்றவைகளைத் தூய்மைப் படுத்தி வாணலியில் போட்டு வறுத்து, துணியில் அரித்து பத்திரப்படுத்துக. கோப்பிக்குப் பதிலாக இதனை பயன்படுத்துவதனால் உடல் உஷ்ணம் தணிந்து, நரம்பு மண்டலம் பலமடைவதுடன் உடலையும் பலப்படுத்தும் சிறந்த கோப்பியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரகேசரி
# இ-பேப்பர்
# இப்பொழுது
# புதுப்பொலிவுடன்..!




VIRAKESARI
வீரகேசரி

**epaper.virakesari.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்தில் புகைப்படக்கலை

-பேராசிரியர். எஸ். சிவலிங்கராஜா







யாழ்ப்பாணப் பட்டினத்திலே படப்பிடிப்புக் கலையைப் பயின்ற பலர் குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஸ்ரூடியோக்களை நிறுவிப் புகைப் படக்கலையைப் பரவலாக்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்ற இதழ் தொடர்ச்சி)

லோட்டன் கனகரத்தினம் மானிப்பாயிலே 'லோட்டன் ஸ்ரூடியோ' என்ற பெயரிலே ஒரு படப்பிடிப்பு நிலையத்தை நிறுவிப் புகைப்படக் கலையைத் தொழில்துறையாக ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தில் உருவான முதல் ஸ்ரூடியோ 'லோட்டன் ஸ்ரூடியோ' என்றே கூறப்படுகின்றது. லோட்டன் கனகரத்தினத்தின் பெயராலேயே மானிப்பாயில் லோட்டன் வீதி அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தின் புகைப்படக் கலை முன்னோடிகளில் ஒருவரான லோட்டன் கனகரத்தினத்தின் மகன் லோட்டன் துரைசாமி கொழும்பில் ஸ்ரூடியோ ஒன்று வைத்துத் திறம்பட நடத்தினார் என்றும் அறிய முடிகின்றது.

மானிப்பாய் லோட்டன் கனகரத்தினத்தின் மாணாக்கர் பரம்பரையினரே யாழ்ப் பாணத்தில் புகைப்படக் கலையை வளர்த்தவர்களாகக் காணப்படுகின்றனர். லோட்டன் கனகரத்தினத்திடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த என்.பி.மாணிக்கத்தம்பி என்னும் கலைஞன் 'வேலை பழக'ச் செல்கின்றார். லோட்டனிடம் மாணிக்கத்தம்பி சேர்ந்தமை பற்றிப் பின்வருமாறு கூறப்படுகிறது.

என்.பி.மாணிக்கத்தம்பியின் தகப்பனார் அக்காலத்தில் புகழ்பெற்ற ஒரு அண்ணா வியாராக விளங்கினார். அத்தோடு சிற்பங்கள் செய்வதிலும் சித்திரங்கள் வரை வதிலும் வல்லவர். இவரை ஊரவர் 'மேஸ்திரி' என்றே அழைத்தனர். மாணிக்கத்தம் பியின் தகப்பனார் ஒரு நாள் தனது பணியாட்கள் சகிதம் லோட்டன் கனகரத்தினத்தின் வீட்டுக்கு 'சீன்ஸ்' (காட்சித் திரை) வரையவும் சுவர்களில் சித்திரங்கள் தீட்டவும் சென்றிருந்தார். மாணிக்கத்தம்பியும் தகப்பனாருடன் லோட்டன் வீட்டுக்குச் சென்றிருந்தார். அங்கே லோட்டன் படம்பிடித்துக் கழுவுவதை (Develop) கண்டதும் ஆர்வமேலீட்டால் அவருடன் சேர்ந்து தானும் வேலை செய்யப் போவதாகத் தந்தை யாரிடம் கேட்டார். அழகியற்கலை ஈடுபாடு கொண்ட தந்தையார் மாணிக்கத்தம் பியைப் 'படம்பிடிக்கும்' கலையைப் பயில அனுமதி வழங்கினார். லோட்டன் கனகரத்தினமும் மாணிக்கத்தம்பியின் ஆர்வத்தைக் கண்டு அன்போடு புகைப்படக் கலையைப் பயிற்றுவித்தார். மாணிக்கத்தம்பி படப்பிடிப்னை ஊதியம் தரும் தொழிலாகக் கருதாது உயர்ந்த கலையாகவே செய்துவந்தார் என்று கூறப்படுகின்றது.

அக்காலத்தில் சூரிய வெளிச்சத்திலேயே (Sun light) படங்கள் பிடிக்கப் பட்டன. மழை, மந்தார நேரங்களிலும் இரவிலும் படங்கள் பிடிப்பதில்லை. இயற்கை தரும் அளவான வெளிச்சத்தைப் படப்பிடிப்புக்குப் பயன்படுத்துவதே ஒரு நுட்பமாகக் கருதப்பட்டது.

லோட்டனுக்கு பின் யாழ்ப்பாணத்தின் சிறந்த புகைப்படக் கலைஞனாகத் திகழ்ந்த மாணிக்கத்தம்பியிடம் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் இருந்தும் ஆர்வம் மிக்க இளைஞர்கள் படப்பிடிப்புக் கலையைப் பயில வந்து சேர்ந்தனர். இவரிடம் மாணாக்கர்களாக இருந்து பயின்றோரில் செல்வராசா, ஜோன் மத்தியூஸ், மார்டின், மனுவேற்பிள்ளை, நீக்கிலாஸ் (மாணிக்கத்தம்பியின் மகன்), ஞானப் பிரகாசம் (ஞானம் ஸ்ரூடியோ, ஞானம்ஸ் ஹோட்டல் உரிமையாளர்) முதலியோர் விதந்து குறிப்பிட வேண்டியவர்கள். முற்குறிப்பிட்டவர்களை விட இன்னும் பலர் படப்பிடிப்புக் கலையைப் பயின்றனர் என்றும் அறிய முடிகின்றது. ஆனால் அவர்களின் பெயர் விபரங்களை அறிய முடியவில்லை. முற் குறிப்பிட்டவர்கள் யாழ்ப்பாணத்தின் சிறந்த புகைப்படக் கலைஞர்களாகவே விளங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1910 களில் 'மூவிங் லென்ஸ்' தொழில்நுட்பம் இன்றி பிடிக்கப்பட்ட படம்

அக்காலத்தில் சூரிய வெளிச்சத்திலேயே (Sun light) படங்கள் பிடிக்கப் பட்டன. மழை, மந்தார நேரங்களிலும் இரவிலும் படங்கள் பிடிப்பதில்லை. இயற்கை தரும் அளவான வெளிச்சத்தைப் படப்பிடிப்புக்குப் பயன்படுத்துவதே ஒரு நுட்பமாகக் கருதப்பட்டது.

மாணிக்கத்தம்பியின் மாணாக்கர் பரம்பரையினர் ஈழத்தில் பல பாகங்களிலும் ஸ்ரூடியோக்களை நிறுவிப் புகைப்படக்கலை வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். மன்னாரில் மத்தியூஸ் ஸ்ரூடியோவை நிறுவியவரும் மாணிக்கத்தம்பியின் நேரடி மாணவரேயாவர். யாழ்ப்பாணத்தில் 'செல்லம்ஸ்' ஸ்ரூடியோவை நிறுவியவர் மாணிக்கத்தம்பியின் மகன் நீக்கிலாஸ் என்பதும் குறிப்பிடத்தக்கது. சிறந்த புகைப்படக் கலைஞரான நீக்கிலாஸ் தமக்கெனச் சிறப்பானதோர் மாணவர் பரம்பரையை உருவாக்கியுள்ளார். புகைப்படக்கலை நுட்பங்களை ஒளிவுமறைவின்றிச் சொல்லித்தரும் உயர்ந்த பண்பாளர் நீக்கிலாஸ் என்று அவரது மாணவர்கள் கூறுகின்றனர். இன்று யாழ்ப்பாணத்தின் சிறந்த புகைப்படக் கலைஞர்களாக விளங்கும் மூத்த பரம்பரையினர் திரு. நீக்கலாஸ் அவர்களை 'எங்கள் குருநாதர்' என்றே அழைக்கின்றனர். ஆரம்பகாலக் புகைப்படக் கலைஞர் கள் பலர் சிற்பம், சித்திரம், ஒப்பனை, நாடகம் முதலான கலைகளிலும் வல்லுனர்களாகத் திகழ்ந்துள்ளனர். யாழ்ப்பாணத்தின் சிறந்த புகைப்படக் கலைஞராக விளங்கிய K.K.V.செல்லையா முற்குறிப்பிட்ட எல்லாக் கலைகளிலும் வல்லுனராகத் திகழ்ந்தார் என்று அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணத்தின் புகைப்படக் கலை வளர்ச்சியில் பல ஸ்ரூடியோக்கள் பங்காற்றியுள்ளன. அவற்றுள்ளே சில இன்று இடம் மாறியுள்ளன. சில பெயர் மாறியுள்ளன. சில நிர்வாகம் மாறியுள்ளன. சில தொழிலை நிறுத்தியுள்ளன. சில யுத்த அனர்த்தங்களால் முற்றாக அழிந்துள்ளன.


யாழ்ப்பாணத்தின் புகைப்படக்கலை வரலாற்றுடன் லோட்டன் ஸ்ரூடியோ, லங்கா போட்டோ, லில்லி, பாரத், பிறின்ஸ், ஸபாஸ், வேல், லீலா, செல்லம்ஸ், வாசன், ஜெமினி, விக்ரர், ஞானம்ஸ், கலைஞானி, கொழும்பு ஸ்ரூடியோ, குகன் ஸ்ரூடியோ (பருத்தித்துறை) முதலான ஸ்ரூடியோக்கள் பிரிக்க முடியாத தொடர்புகளை கொண்டுள்ளன.

கொழும்பு ஸ்ரூடியோவை மானிப்பாயைச் சேர்ந்த கனகசபை என்பவர் நிறுவினார் என்றும் அதிலே தென்னிலங்கையைச் சேர்ந்த மதங்கசிங்க பியதாஸ என்பவர் பணிபுரிந்தார் என்றும் அறிய முடிகின்றது. காலப்போக்கில் கனகசபையிடமிருந்து மதங்கசிங்க பியதாஸவே கொழும்பு ஸ்ரூடியோவைப் பொறுப்பேற்றுத் திறம்பட நடத்தினார் என்றும் அறிய முடிகின்றது.

ஸ்ரூடியோ கமரா மூலம் 1920 ஆம் ஆண்டளவில் பிடிக்கப்பட்ட வெளிப்புறக் காட்சிப்படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எஸ். கே. லோட்டன் அன்கோ புகைப்பட நிறுவனம் 1910 ஆம் ஆண்டில் பிரசுரித்த விளம்பரம்

யாழ்ப்பாணப்பட்டினத்திலே படப்பிடிப்புக்கலையைப் பயின்ற பலர் குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஸ்ரூடியோக்களை நிறுவிப் புகைப் படக்கலையைப் பரவலாக்கியுள்ளனர். குறிப்பாக அச்சுவேலி, தெல்லிப்பழை, சுன்னாகம், காரைநகர், பருத்தித்துறை முதலிய இடங்களிலே திரைப்பட ஸ்ரூடியோக்கள் புகைப்படக்கலையின் பரம்பலுக்கும் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியுள்ளன.

யாழ்ப்பாணப்பட்டினத்திற்கு வெளியே நிறுவப்பட்ட ஸ்ரூடியோக்களுள் பருத்தித்துறை குகன் ஸ்ரூடியோ குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது. குகன் ஸ்ரூடியோ அதிபர் திரு. நாகரத்தினம் படப்பிடிப்புக் கலையினைப் பறங்கித்தெருவிலே வசித்த திரு.நைற் என்பவரிடம் பயின்றதாகக் குறிப்பிடுகின்றார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சாயலையுடைய ஒருவருக்கு நாவலர் போல வேஷமிட்டு எடுத்த படத்தின் nagative இவரிடம் இருந்ததாகக் குகன் அதிபர் நாகரத்தினம் குறிப்பிடுகின்றார். நாவலரது எனக் கருதப்படும் படத்தினை எடுத்த அல்லது பாதுகாத்த பெருமை திரு. நைற் அவர்களையே சாரும் என்றார்.

யாழ்ப்பாணம் பறங்கித்தெருவில் தனது படப்பிடிப்பு வேலைகளைச் செய்து வந்த நைற் என்பவர் வட்டுக்கோட்டை துணைவி என்னும் இடத்தைச்சேர்ந்தவர். S.K.லோட்டனின் சமகாலத்தவரான நைற் புகைப்படக்கலையை யாரிடம் பயின்றார் என்று அறிய முடியவில்லை. திரு.நைற் சிறிது காலம் மலேசியாவிலே வாழ்ந்தார் என்றும் அங்கே தான் புகைப்படக்கலையைப் பயின்றிருக்க வேண்டும் என்றும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திலே முதன்முதலாக (Outdoor) திறந்த வெளிப்படப்பிடிப்பை ஆரம்பித்தவர் நைற் என்றே கூறப்படுகின்றது. ஒரு துவிச்சக்கரவண்டியில் தனது புகைப்படக் கருவிகளுடன் சென்று பல வெளிப்புறப் படப்பிடிப்புக்களை இவர் செய்தார் என்று கள ஆய்வின் மூலம் தெரிய வந்தது. இவரை ஊரவர் நைற் மாஸ்டர் என்றே அழைப்பது வழக்கம்.

யாழ்ப்பாணத்தில் புகைப்படக்கலை மரபு இரு ஊற்றுக்களிலிருந்து ஓடத் தொடங்கியிருக்கின்றது எனக் கருதலாம். மாணிக்கத்தம்பியின் மாணாக்கர் பரம்பரையினரைத் தெளிவாக இனங்காண முடிகின்றது. குகன் அதிபர் நாகரத்தினத்தைத்தவிர நைற் மாஸ்டரின் மாணாக்கர் பரம்பரையினரைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை. குகன் ஸ்ரூடியோ அதிபர் நாகரத்தினத்தின் மாணாக்கர் பலர் இன்று சிறந்த புகைப்படக்கலைஞர்களாக விளங்குகின்றனர்.

உடுவில் மகளிர் கல்லூரியில் 1907 ஆம் ஆண்டில் பிடிக்கப்பட்ட படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாழ்ப்பாணத்தில் புகைப்படக்கலை அறிமுகமாகிய பின் புகைப்படம் தொடர்பாக எழுந்த நம்பிக்கைகள் பற்றிச் சுவையான செவிவழிக்கதைகள் பல நிலவுகின்றன. யாழ்ப்பாணத்துக்கல்விமான்கள் புலமையாளர்கள் பலரைப்படம் பிடித்துவிட வேண்டுமென்று கென்றி மாட்டின் 'படாதபாடு' பட்டதாகக் கூறப்படுகின்றது. பெரும்பாலான சைவத்தமிழ் அறிஞர்கள் படப்பிடிப்புக் கலையை முற்றாக நிராகரித்தனர் என்றும் கூறப்படுகின்றது.

புகைப்படக்கருவி, ஆட்களை உயிரை இழுத்தெடுக்கும் தன்மை வாய்ந்தது என்றும் படம் பிடித்தால் ஆயுள் குறையும் என்றும் அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணத்தமிழ் மக்களின் ஆயுளைக்குறைக்க ஒரு சூத்திரத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள் என்றும் அக்காலத்திலே பரவலாகப் பேசப்பட்டதாக அறிய முடிகின்றது. இங்கு நிலவிய மூட நம்பிக்கைகளினால் எமது மூதாதையரின் மெய்யுருக்களைக்கண்டு மகிழும் பாக்கியத்தை நாம் இழக்க வேண்டியதாயிற்று.

எழுத்திலே காட்டாத, காட்ட விரும்பாத யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக்கோலங்கள் பலவற்றை (19ஆம் நூற்றாண்டு) வட்டுக்கோட்டை செமினறியினர் பிடித்த படங்களினூடு காண முடிகின்றது. 19ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்துப் பெண்கள் கட்டும் குறுக்குக்கட்டு, ஆண்கள் கட்டு கோவணம், கொடுக்குக்கட்டு, ஆண்கள் கட்டும் குடும்பி, கன்னக்கொண்டை, சிறுவர்களின் நிர்வாணக்கோலம், சவரம் செய்யாத முகத்தோற்றம் ,சால்வை, பெண்களின் தாவணி வகைகள் முதலானவற்றையும் பெண்கள் அணியும் பல்வேறு வகையான அணிகலன்களையும் ஆண்கள் அணியும் கடுக்கன் போன்ற ஆபரணங்களையும் வட்டுக்கோட்டை செமினறியினர் பிடித்த மெய்யுருக்களான புகைப்படங்களினூடு தெளிவாகக் கண்டுகொள்ள முடிகின்றது. அத்துடன் வீட்டு அமைப்புக்கள் தளபாடங்கள் (உரலை இருக்கையாக பாவிக்கும் முறை) திருவிழாக்காட்சிகள் முதலானவற்றையும் அக்காலப் புகைப்படங்களினூடு காண முடிகின்றது. இப்படங்களிற் பல இன்றைய யுத்தச் சூழ்நிலைகளால் அழிந்து போனமையும் குறிப்பிடத்தக்கது. புகைப்படக்கலை துரித வளர்ச்சியடைந்திருக்கும் இக்காலக்கட்டத்திலே ஆரம்பக்கால புகைப்படச் செயற்பாடுகள் பற்றி அறிவதும் ஆராய்வதும் சுவை பயப்பதாயுள்ளது. யாழ்ப்பாணத்திலே மாத்திரமின்றி இலங்கையிலேயே முதன்முதல் புகைப்படம் பிடித்த (எடுத்த) கென்றி மாட்டினின் புகைப்படத்தையே இன்று பெற முடியவில்லை என்பது கவலை தருவதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ் மரபை இறுகப் பற்றிநின்ற

## பேராசிரியர் ஆ.சதாசிவம்



- பேராசிரியர் சபா. ஜெயராசா

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பல்வேறு பட்ட ஆளுமைகளின் ஒன்று கூடலாகவும், தொகுப்பாகவும் அமைந்திருந்தது. அந்தத் தொகுப்பிலே தமக்கே உரிய மரபு வழித் தனித்துவங்களோடு, மெலெழுந்தவர் பேராசிரியர் ஆ.சதாசிவம் (1926-1988) அவர்கள்.

மரபு வழித் தமிழ்க் கல்வியை தமிழ்ப் பேராசிரியர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையிலே பிரதிநிதித்துவம் செய்தனர். அந்நிலையில் இருவகையான எழுச்சிகள் பேராசிரியர்களிடத்துக் காணப்பெற்றன. ஒரு சாரார் மரபை மாறா நிலையிலே தரிசித்தனர். இன்னொரு சாரார் இயங்கு நிலையிலே மாறும் வடிவினதாகக் கண்டனர்.

பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்கள் செந்தமிழ் மரபை மாறா உறுதியோடு தரிசித்தவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினரால் மரபு பற்றிய கருத்தாடல்கள் முன்னெடுக்கப்பட்ட வேளை, பண்டைய மரபுகளை மாறாத உறுதியுடன் பாதுகாக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தியதுடன் தனது கருத்தை ஊடகங்கள் வாயிலாகவும் வெளியிட்டவர்.

பேராசிரியர் பிறந்தவூர் அராலி; சைவ பக்தியிலும் பழைமையிலும் ஊறிய கிராமம். ஒரு புறம் அராலிக் கிராமத்தில் மரபுகளினதும் பழைமைகளினதும் மேலோங்கல் நிகழ்ந்து கொண்டிருக்க, மறுபுறம் அதன் அயற்கிராமமாகிய வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரியை நடுநாயகமாகக் கொண்ட மேலைப் புலத்து நவீன சிந்தனைகள் எழுச்சி கொண்டன.

அந்த விசைகளினூடே பழைமை மற்றும் மரபுகள் மீதான உளக் கோலங்கள் பேராசிரியரிடத்துச் சிறு வயதிலிருந்தே ஆழப்பதிந்திருந்தன. கிராமத்துப் பதிவுகள் அவரது புலமை நீட்சியிலே தொடர்ந்து வளர்ந்து கொண்டிருந்தன. அதன் தொடர்ச்சியே அவர் தமிழை வரன் முறையாகக் கற்று மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சையிலே முதற் பிரிவிலே திறமைச் சித்தியைப் பெற்றமையாகும். அதே வேளை, நவீன கல்வி மரபோடும் தன்னை இணைத்துக்

சுமேரிய மொழியை நெடுங்காலமாக ஆராய்ந்தவேளை, சுமேரியன் ஒரு திராவிட மொழி என்பதைத் தகுந்த ஆதாரங்களோடு நிறுவியதுடன் தமிழின் தொன்மை பற்றிய ஆய்வு சுமேரியமொழி பற்றிய ஆய்வின்றி முழுமை பெறாது என்ற நிலையை உருவாக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முயன்ற அவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆங்கிலம், இலத்தீன், வடமொழி ஆகிய மொழிகளை கற்றார்.

சில காலம் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலே கற்ற அனுபவங்கள் மொழி நிலையிலே மேலும் வல்லமை சேர்க்கும் செயற்பாடுகளுக்கு வளம் சேர்த்தன. அந்தச் சூழலிலே அவர் சிங்களம் மற்றும் பாளி மொழிகளைப் பயிலும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டார்.

ஆழ்ந்த தமிழ்ப் புலமையோடும் நவீன பல்கலைக்கழக மரபோடும் அவரது உயர் கல்விச் செயற்பாடுகள் மேலெழுந்தன. தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றவேளை ஏனைய மொழிகளைக் கற்பதிலும் அவருக்கிருந்த ஈடுபாடுகள் மேலோங்கின.

ஆ.சதாசிவம் அவர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவியை ஏற்றுக் கொண்ட காலத்திலே தமிழ்த்துறை பல்வேறு ஆற்றல்கள் கொண்ட ஆளுமைகளின் சங்கமமாக விளங்கியது. பேராசிரியர்கள் க.கணபதிப்பிள்ளை, வி.செல்வ நாயகம், சு.வித்தியானந்தன், ஆ.சதாசிவம் ஆகிய ஒவ்வொருவரும் தனித்துவம் மிக்க பங்களிப்பைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு வழங்கினர். அவர்களது புலமைச் செயற்பாடுகளும் ஆய்வு முன்னெடுப்புகளும், அனைத்துலக நிலையிலே தமிழ்த் துறைக்குரிய அங்கீகாரத்தை ஏற்படுத்தின.

1954 ஆம் ஆண்டில் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட அவர் 1956ஆம் ஆண்டில் முதுநிலை விரிவுரையாளராகப் பணி அமர்த்தப்பட்டார். தொடர்ந்து பிரித்தானியாவில் உள்ள ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் சென்று கலாநிதிப் பட்டத்துக்குரிய ஆய்வை மேற் கொண்டார். அக்காலத்திலே 'ஆய்வுமுறையியல்' என்ற புலமைத்துறை பல்கலைக்கழகங்களிலே சிறந்து வளர்ச்சியடையத் தொடங்கியது. ஆய்வு முறைமை செப்பமாக அமையும் பொழுது ஆய்வின் தரம் மேலோங்கி எழுச்சி கொள்ளமுடியும். ஆய்வு முறையியலைத் தெளிவாகக் கற்றுக் கொண்ட அவர் இந்நாட்டுக்கு மீண்டுவந்தவேளை ஆய்வு முறையியல் தொடர்பான ஒரு நூலைத் தமிழில் எழுதியமை குறிப்பிடத்தக்கது. தமிழில் முதலில் வெளி வந்த ஆய்வு முறையியல் தொடர்பான வழி காட்டி நூலாகவும் அது அமைந்தது.

தமிழ் மொழியின் தொன்மையினையும் அதன் பூர்வீகத்தையும் மொழியியல் ஆதாரங்களை அடியொற்றி நிறுவும் முயற்சிகளை மேற் கொண்டார். அவருடைய காலத்தில் மொழியியல் என்ற துறை மேலைத்தேயப் பல்கலைக் கழகங்களில் ஆழ்ந்து வளர்ச்சியடையத் தொடங்கியது. தமக்குரிய புலமை ஆளுமையால் அவர் புல்பிரைட் புலமைப் பரிசில், பொது நலவாயப் புலமைப்பரிசில் முதலியவற்றைப் பெற்றுக்கொண்டார்.

அவரது மொழியியல் ஆய்வையும் விருப்பையும் வளர்ப்பதற்கு வழிகாட்டியாக விளங்கியவர்கள் தொமஸ்பரோ அவர்கள். அவர் திராவிட மொழிகள் பற்றிய கல்வியில் உலகப் புகழ்பெற்ற அறிஞராக விளங்கியவர். அவரே பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்களது கலாநிதிப்பட்ட ஆய்வுக்கு வழிகாட்டியாகவும் அமைந்தவர்.

மொழியியல் ஆய்வைத் தமது வாழ்க்கையில் ஒன்றிணைந்த பகுதியாக அமைத்துக் கொண்ட பேராசிரியர், சுமேரிய மொழியை நெடுங்காலமாக ஆராய்ந்தவேளை ஒரு முக்கியமான கண்டு பிடிப்பை நோக்கி நகர்ந்தார். சுமேரியன் ஒரு திராவிட மொழி என்பதைத் தகுந்த ஆதாரங்களைக் கொண்டு நிறுவினார். தமிழின் தொன்மை பற்றிய ஆய்வு சுமேரியமொழி பற்றிய ஆய்வின்றி முழுமை பெறாது என்ற நிலையை உருவாக்கினார்.

அவரது காலத்திலே தமிழகத்திலே திராவிட இயக்கம், தனித்தமிழ் இயக்கம் முதலியவை எழுச்சி கொண்டிருந்தன. அந்நிலையிலே தமிழின் தனித்து வத்தையும் தொன்மையையும் விஞ்ஞான பூர்வமாகவும், ஆதாரபூர்வமாகவும் நிறுவவேண்டிய தேவை பல்கலைக்கழக ஆய்வாளருக்கு இருந்தது. அத்தகைய சூழலில் சாசனவியலை அடியொற்றிய தனித்துவங்களைப் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை தேடினார். பண்பாட்டியலை அடிப்படையாகக் கொண்டு தனித்துவங்களைப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நிறுவினார். இலக்கிய வரலாற்றை அடியொற்றிய தனித்துவங்களைப் பேராசிரியர் வி.செல்வநாயகம் கண்டறிந்தார். மொழியியலை அடிப்படைத் தனித்துவங்களைப் பேராசிரியர் ஆ.சதாசிவம் நிறுவினார்.

கடினமான இலக்கண விடயங்களையும் அவற்றின் ஆழம் சிதையாது மாணவர்களுக்குப் புரியும்படி கற்பிக்கும் தனித்துவமான ஆற்றல் பேராசிரியர் ஆ.சதாசிவத்திடம் காணப்பட்டது. அவ்வாறே சுவையுடன் பழந்தமிழ் இலக்கியங் களைக் கற்பிக்கும் ஆற்றலும் அவரிடத்தே காணப் பெற்றது. மரபு வழித் தமிழ் கற்பிக்கும் முறை மையையும் மேலைப்புலத்தில் வளர்ச்சி பெற்று வந்த நவீன கற்பித்தலையும் இணைத்த செழுங்கலவை (BLEND) நிலையைத் தனித்துவத்துடன் உருவாக்கிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபு வழுவாத செந்தமிழ் வழக்கை மாணவரிடத்தே வளர்த்தெடுப்பதிலே தளராத உறுதி கொண்டிருந்தார். செந்தமிழ் வழக்கை நவீன இலக்கியங்களிலும் நீட்சி கொள்ளச் செய்ய வேண்டுமென விரும்பினார். அதன் தொடர்ச்சியாகவே இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முன் வைத்த பேச்சு மொழி இலக்கிய கோட்பாடுகளோடும் அவர் முரண்பட்டார்.

இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் தமிழ்க்குழுவின் தலைவராக இயங்கிய வேளை அதேகருத்தையே அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். அக்காலத்தில் அவர் மேற்கொண்ட மிகவும் முக்கியமான ஒரு பணி 'ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' என்ற நூலைத் தொகுத்து சாகித்திய மண்டல வெளியீடாகக் கொண்டுவந்தமையாகும். ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றைப் பொறுத்தவரை அது ஓர் ஆதார நூலாகவும் உசாத்துணை நூலாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தரவுறுதி மிக்க தமிழ் நூலை இலங்கை சாகித்திய மண்டலத்தின் வழியாக வெளியீடு செய்யும் முயற்சியையும் மரபையும் பேராசிரியர் தொடக்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

புலவர்களின் ஆக்கங்களைக் கால முறைப்படி தொகுத்த, 585 பக்கங்களைக் கொண்ட பெரிய தொகுதியாக அந்நூல் அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் காவிய பாடசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் வித்துவான் ந.சுப்பையாபிள்ளை அவர்களும் பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்களும் இந்நூலுக்குரிய அணிந்துரையை வழங்கியுள்ளனர்.

இந்நூலுக்குப் பேராசிரியர் எழுதிய முன்னுரையானது ஒரு நூலுக்கு முன்னுரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதற்கு வழிகாட்டியாகஉள்ளது. நூற்பெயர், நூலமைப்பு, நூலில் உள்ள பிரபந்த இலக்கியங்கள், நூலாக்கத்துக்கு உறுதுணையாயினோர் என்ற அமைப்புக்களைக் கொண்டதாக முன்னுரை ஆக்கப்பட்டுள்ளது.

அகவல், அந்தாதி, அம்மானை, இரட்டைமணிமாலை, இருபாவிருபஃது, உலா, ஊஞ்சல், ஒருபாவொருபஃது, கலம்பகம், கலித்துறை, கலிப்பா, கலிவெண்பா, காவியம், கீர்த்தனை, கும்மி, குறவஞ்சி, கோவை, சதகம், சிந்து, தூது, நான்மணிமாலை, பள்ளு, பிள்ளைத்தமிழ், புராணம், மடல், மான்மியம் மும்மணிக்கோவை, மும்மணிமாலை விருத்தம், வெண்பா என்ற ஒவ்வொரு பா வடிவத்தையும் அகர வரிசையில் அமைத்து அவற்றுக்குரிய விளக்கங்களையும் தந்திருத்தல் தொகுப்பு முயற்சி செய்வோருக்குரிய வழிகாட்டலாக அமைந்துள்ளது. அத்துடன் பா வகைகளை அறிந்து கொள்ள விரும்புவோருக்குரிய விளக்கங்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சங்ககாலம், யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர்காலம், போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம், தேசிய எழுச்சிக்காலம் என்ற கால வரையறைகளுக்குள் ஆக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. புலவர் அகராதி, நூல் அகராதி, செய்யுள் அகராதி என்ற பின் இணைப்புகளுடன் விஞ்ஞான பூர்வமான முறையில் தொகுப்பு அமைந்துள்ளது. பழந்தமிழ் இலக்கியத் தொகுப்பில் ஈடுபடுவோருக்குரிய செவ்விய ஆற்றுப்படுத்தலாகவும் அது அமைந்துள்ளது.

பேராசிரியரின் புலமைப் பணிகள் பலபரிமாணங்களைக் கொண்டவை. பல்கலைக் கழகங்களிலே தமிழ் பாடத்திட்டம், இந்து நாகரிகப் பாடத்திட்டம், முதலியவற்றை வடிவமைப்பதிலே பங்கு கொண்டார். பல்கலைக்கழகத்திலே இந்து நாகரிகம் என்ற பாட நெறியை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தார். இந்தப் பாடநெறி இலங்கையைத் தவிர வேறெந்த நாட்டிலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு பல்கலைக் கழகங்களினதும் ஆய்வேடுகளை மதிப்பீடு செய்யும் பரீட்சகராகவும் விளங்கினார். பேராசிரியரைப் பற்றிப் புலவர் கருணாலய பாண்டியனார் சிறப்புப் பாயிரத்தில் பின்வருமாறு குறிபிட்டுள்ளார்.

***'தனக்கிணையில்லாத் தண்டமிழ் மரபு வனப் பொடு நிலவும் வகை புரி நல்லோன்'*** சுவாமி விபுலானந்த அடிகளாரால் தொடக்கி வைக்கப்பட்ட உயர்நிலையான பல்கலைக்கழகத் தமிழ் ஆய்வு மரபு தொய்ந்து விடாமலிருப்பதற்குரிய பங்களிப்புச் செய்தவர்களுள் பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்களும் முக்கியமானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கராம்பு எண்ணெய் மற்றும் புளோரைட்டின் நலன்கள்
# இவ்விரண்டும் ஒன்றாக







பாரம்பரிய கராம்பு எண்ணெய் மற்றும் பற்களைப் பாதுகாப்பதற்காக விஞ்ஞான ரீதியாக பரிந்துரைக்கப்படும் புளோரைட் இவ்விரண்டும் கொண்டது க்லோகாட் மட்டுமே. இதனால் பற்துளைகளை ஏற்படுத்தும் கிருமிகளை அழித்து பற்களுக்குப் பாதுகாப்பை வழங்குகின்றது. சுவாசத்திற்கும் புத்துணர்ச்சியளிக்கிறது.

ரூ. 40/- முதல்

SLDA ACCEPTED SRI LANKA DENTAL ASSOCIATION

SLS 275

PHOENIX O&M

HEMAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்படும் தொல்லியல், இலக்கியச் சான்றுகள்

பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தலைவர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அக்குறுகொடையில் கிடைத்த இன்னொரு நாணயத்தில் 'சுடணாகஸ' என்ற பெயர் உள்ளது. இது சுடணாகனுடைய நாணயம் என்ற பொருளில் உள்ளது. இது தமிழ் மயப்படுத்தப்பட்ட பெயர் என்பதற்கு சில ஆதாரங்களைக் காட்டலாம். வீர சோழியத்தில் 'ழ' வுக்குப் பதிலாக 'ட' பயன்படுத்தப்படலாம் என்ற மரபு காணப் படுகிறது. தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களில் கூட 'ழ'வுக்குப் பதிலாக 'ட' பயன்படுத்தப்பட்ட தற்கு ஆதாரங்கள் உண்டு. இதனால் தமிழில் 'சோழ' என்பதே இங்கு 'சுட' என எழுதப் பட்டுள்ளது எனலாம். ஏனெனில் அசோகனது இரண்டாவது பாறைச் சாசனத்தில் கூட சோழர் 'சோட' என்றே எழுதப்பட்டுள்ளது (Hultzsch1969:XXXIXXX). மேலும் இப்பெயர் இலங்கையில் தமிழருக்குரிய பெயராகவும் இருந்துள்ளதென்பதற்கு கிழக்கிலங்கையில் சேருவில் என்ற இடத்தில் கிடைத்த பிராமிச் சாசனத்தில் வரும் 'தமிழ்ச்சுட' என்ற பெயர் ஆதாரமாக உள்ளது (Seneviratne 1985:52). முன்னர் கூறப்பட்ட நாணயத்தைப்போல் இந்நாணயத்திலும் 'நாக' என்ற பெயர் 'ணாக' என்றே எழுதப் பட்டுள்ளது. இம்மரபு தமிழக பிராமி சாசனங்களில் பின்பற்றப்பட்டுவந்ததற்கு அழகர்மலை போன்ற இடங்களில் காணப்படும் கல்வெட்டுக்களில் ஆதாரம் காணப்படுகின்றது. மேலும்' வடமொழிக் 'க'வுக்குப் பதிலாக இந்நாணயத்திலும் தமிழுக் குரிய 'க' பயன்படுத்தப்பட்டுள்ளமையும் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. நாணயத்தின் முன் பக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ள உருவத்தைப் பேராசிரியர் போபே ஆராச்சி சிங்கம் என அடையாளப்படுத்துகிறார் (Bopearachchi 1999:57). ஆனால் சிங்கத்தில் காணப்படும் குஞ்சத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாணயத்தில் காணமுடியவில்லை. இதனால் இவ்வுருவத்தை புலியென எடுப்பதே பொருத்த மாகத் தெரிகிறது. சங்ககாலம் தொட்டு சோழ மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் புலி அவர்களது அரச இலச்சினையாகப் பொறிக்கப் பட்டுள்ளது. இவற்றை நோக்கும் போது தென் இலங்கையில் ஆட்சிபுரிந்த நாகச் சிற்றரசர்களும் தமிழகத்துடன் கொண்டிருந்த பாரம்பரிய உறவின் காரணமாக சோழர் பயன்படுத்திய புலிச் சின்னத்தை ஒருவேளை தமது நாணயங்களிலும் பொறித்தனரோ எனச் சிந்திக்கத் தூண்டுகிறது. எவ்வாறாயினும் மேற்கூறப்பட்ட நாணயங்கள் இலங்கைத் தமிழரின் அரச உருவாக்கம் பற்றிய ஆய்விலும், அதில் நாகருக்கிருந்த தொடர்பை அறிந்து கொள்வதிலும் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்துகின்றது என்பதில் ஐயமில்லை. ஏறத்தாழ ஒரே காலப்பகுதிக்குள் வேறுபட்ட பெயர்களில் தமிழ் நாணயங்கள் வெளியிடப் பட்டுள்ளமை தென்னிலங்கையிலும் செறிவான தமிழ்க் குடியிருப்புக்கள் இருந்ததற்குச் சான்றாக அமைகின்றன. இதன் காரணமாகவே இங்கு சிற்றரசுகள் தோன்றியதெனக் கூறலாம். இவ்வாறு கூறுவதை மிகைப்படுத்தப்பட்ட கருத்தாகக் கருத முடியாது. ஏனெனில் இத்தமிழ் நாணயங்கள் புழக்கத்திலிருந்த காலகட்டத்தில்தான் அநுராத புரத்தில் ஆட்சி செய்துகொண்டிருந்த எல்லாளன் என்ற தமிழ் மன்னனுக்கு எதிராக மஹாகமையில் இருந்து படையெடுத்துச் சென்ற துட்டகைமுனு தென்னிலங்கையில் 32 தமிழ்ச் சிற்றரசர்களை முதலில் வெற்றி கொள்ள நேரிட்டதாக மஹாவம்சம் கூறுகிறது (Mahavamsa xxv:75). இவ்வரலாற்றுக் குறிப்பு இங்கு கிடைத்த தமிழ் நாணயங்கள் தமிழ்ச் சிற்றரசர்களால் வெளியிடப் பட்டதென்பதற்கு ஒரு சான்றாக அமைகிறது.

இருப்பினும், தென்னிலங்கையில் பிராகிருத மொழிப் பேரினக்குழுக்களின் எழுச்சியால் அங்கு நாரு மரபை முன்னிலைப்படுத்தும் பெயர்கள் அரசியலிலும், சமூகத்திலும் இருந்து படிப்படியாக மறைந்த போது, அவற்றைப் பாதுகாத்து நீண்ட காலம் நீடித்து நிலைக்கச் செய்த பெருமை நாக தீபத்திற்கு உண்டு. இதற்குப் பின்வரும் வரலாற்றுச் சம்பவங்களை ஆதாரமாகக் காட்டலாம். கி.மு. 6ஆம் நூற்றாண்டளவில் புத்தர் இலங்கை வந்த போது நாகதீபத்தில் மகோதன், குலோதரன் ஆகிய நாக மன்னர்களிடையே நடந்த சிம்மாசனப் போராட்டத்தை புத்தர் தீர்த்து வைத்ததாக மஹா வம்சம் கூறுகிறது (Mahavamsa I:48-51). இதேவேளை ஸம்மோஹவிநோதனீ என்ற பாளி நூலில் வரும் கதையில் நாகதீபத்து ஆட்சியாளன் 'தீபராஜ' என்ற விருதைப் பெற்றிருந்தான் எனக் கூறப்படுகிறது. இத்தீபராஜ என்ற பெயரே பின்னர் தமிழில் தீபத் தரையன் என மாறியதாகக் கூறப்படுகிறது (இந்திர பாலா 2006:191-192). மிகிந்தலையில் கண்டு பிடிக்கப்பட்ட பிராமிச் சாசனம் ஒன்று தீபராஜா என்ற மன்னன் பற்றிக் கூறுகிறது. இவன் நாக தீபத்தில் ஆட்சி செய்த மன்னனாக இருக்க

ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரை மோதிரத்தில் காணப்படும் மூன்று குறியீடுகளும் மூன்று பிராமிக் எழுத்துக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என பேராசிரியர் பரணவிதானா கூறுகிறார் (Paranavithane 1970: lxiii). இலங்கையில் நாக இனக்குழுவின் தோற்றமும், அரச உருவாக்கமும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் உருவானவை என்ற வலுவான கருத்துக் காணப் படுகிறது (Deraniyagala 1992:635, Indrapala 2004:173). வட இலங்கையில் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததற்கான தொல்லியற் சான்றுகள் கந்தரோடை, ஆனைக்கோட்டை, பூநகரி, சாட்டி, மன்னார் போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன (Seneviratne 199":99-131, Ragupathy 1987, Indbapala 205, Sitrampalam 2004:231-282,

ஈடுபட்ட நாணயவியலாளர் சேயோன் தனது ஆய்வின் போது பிராமி எழுத்துப் பொறித்த அரிய பல நாணயங்களைக் கண்டுபிடித்துள்ளார் (SeYon1998:94, nos.3-10). இவை அக்றுகொடாவில் கிடைத்த நாணயங்களின் சமகாலத்திற்குரியவை என்பதை அவற்றின் எழுத்தமைதி கொண்டு கணிக்கமுடிகிறது. ஆயினும் இந்நாணயங்கள் தொடர்பாக ஆசிரியரால் பிரசுரிக்கப்பட்ட நூலில் உள்ள புகைப்படத்தில் நாணயங்களில் உள்ள எழுத்துக்கள் தெளிவற்றிருப்பதனால் அவற்றின் பெயர்களைச் சரிவர வாசிக்க முடியவில்லை. இருப்பினும் ஒரு சில எழுத்துக்கள் தமிழ் மற்றும்



அக்றுகொடாவில் கிடைத்த நாணயங்களின் விளக்கத்தோற்றம்

